உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—சகூ.] விக்ருதி-௵ சித்திரை—வைகாசி௴ [பகுதி—சா, எ.

Vol. 46. April—June 1950 No. 6, 7.

உள்ளுறை.

ஒரு கம்பசூத்திர வுரையாராய்ச்சி:—	திரு. இலக்குவன்	ககரு—ககஅ
பராசத்திதோத்திரம்:—	திரு. த. ச. மீநாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்	ககஅ—கஉ0
திருக்குருகூர்த் திருப்பணிமாலை:—	திரு. L. ஆதிநாதபிள்ளையவர்கள்	கஉக—கஉஅ
பெண்களுக்குப் பெருந்தகைமை கற்பே:—	திரு. சி. கணேசையரவர்கள்	கஉகூ—கஙச
நாலடியார் இருவருரைத்திருத்தம்:—	திரு. சத்தியவாகீசுவரையவர்கள்	கஙரு—கசச
ஐயவினாத்தொடர்:—	ஒருமாணவன்	கசரு—கசஅ
மதிப்புரை:—		கசகூ—கருஉ
திருச் சிறுபுலியூர்-உலா குறிப்புரையுடன்:—	பத்திராசிரியர்	49—64

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1950.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணன்,

மானேஜர்.

உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪௬.] விக்ருதிஸு சித்திரை—வைகாசிமீ [பகுதி-௬, ௭.
Vol. 46. April—June 1950 No. 6, 7.

ஒரு கம்பசூத்திர வுரையாராய்ச்சி

கல்வியிற்பெரிய கம்பர் இயற்றிய இராமவதாரச் செய்யுட்கள் பல்வகைப் பொருள்களைச் செவ்விதின் விளக்கித் திட்பமும் நுட்பமும் வாய்ந்து சூத்திரங்களாக விளங்குகின்றன. அதுபற்றியே பேரறிஞர்கள் இராமாவதாரப்பாடலைக் "கம்பசூத்திரம்" என்று வழங்குவாராயினர்.

சூத்திரவுருவில் அமைந்த இந்நூற்கு உரைகண்டார் பலர். அவருள், இந்நூல் முழுதிற்கும் உரைகண்ட பெருமை ஸ்ரீ. உப. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரவர்களைச் சாரும். காஞ்சி வித்வான் இராமசாமிநாயுடு அவர்கள் கண்ட வுரை பாலகாண்டத்திற்குமட்டுங் கிடைக்கிறது. மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் ஆரணியகாண்டத்திற்குமட்டும் உரைகண்டுள்ளனர். வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் முதலான அறிஞர்களால் அவ்வப்போது சில பல படலங்களுக்கு வரையப்பட்ட உரைகளும் உண்டு. இவை கம்பர்கவிப்பொருளை இனிது விளக்குவனவாயினும் இவற்றால் கவிகருத்து விளக்கமடையாத சில சூத்திரங்களுங் காணப்படுகின்றன. அவற்றுள், பாலகாண்டத்து நாட்டுப்படலத்தில் 39-ஆம் பாட்டின் முதலடியாகிய

"கூற்றமில்லை யோர்துற்ற மிலாமையால்"

என்பதும் ஒன்று.

இதற்கு, வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரவர்கள்,

"ஓர்துற்றம் இலாமையால்—(எவரிடத்தும்) தீவினைச்செய லில்லாமையால், கூற்றம் இல்லை—அகாலமிருத்யு (அந்நாட்டில்) உண்டாவதில்லை"

என்று பதவுரையும்,

"நாட்டில் தீச்செயல்கள் நிகழ்தலால்தான் அகாலமிருத்யு தோன்று கின்றதென்பது நூற்கொள்கை. அவ்விஷயத்தை உத்தரகாண்டத்தில் சம்பூகனுடைய வரலாற்றலும் அறியலாம். இனி, முதலடிக்கு அந்நாட் டில் கொலை களவு முதலிய எக்குற்றமும் இல்லாமையால் யமனுடைய ஆணை செல்வதில்லை யென்றுமாம்; "கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற், செல்லா துயிருண்ணுங் கூற்று" என்ற துங் காண்க."

என்று விசேடவுரையும்,

காஞ்சிவித்வான் இராமசாமிநாயுடு அவர்கள்,

"ஓர் குற்றம் இலாமையால்—(அந்நாட்டுச் சீவர்களிடத்தில்)சிறிது குற்றமும் இல்லாதிருத்தலால், கூற்றம் இல்லை—யமபயம் இல்லை"

என்று பதவுரையும்,

"குற்றம் என்றது காமாதிகளை. அவையில்லாதவிடத்தில் யமனாணை பயன்படாதென்பார், ஓர் குற்றம் இலாமையால் கூற்றம் இல்லை என்றார்"

என்று விசேடவுரையும் வுரைந்துள்ளனர்.

இனி இவ்வுரைகள்மூலத்தொடு பொருந்துமா? என்று ஆராய லாகும்.

கூற்றமில்லை என்பது துணிபொருள்; குற்றமிலாமையால் என் பது ஏது.

இவற்றுட் கூற்றம் என்பது பொதுவகையால் (1) சொல், (2) யமன், (3) நாட்டின் ஒருபாகம் என்பன ஆதிய பொருள்களையும், குற்றம் என்பது பொதுவகையால் (1) குறை, (2) தீங்கு, (3) பிழை என்பன ஆதிய பொருள்களையும் உணர்த்திநிற்கும் என்பது நிகண்டு முதலிய நூல்களால் அறிந்ததே. எனினும் மேலே காட்டிய உரை காரர்கருத்துப்படி கூற்றம் என்பது அகாலமிருத்தியு அல்லது யம பயம் அல்லது யமனாணை என்பதனையும், குற்றம் என்பது தீவினைச் செயல் அல்லது காமாதிகளையும் சிறப்புவகையால் உணர்த்திநிற் றற்கு ஈண்டியைபென்னை? ஒருவாறு இயைபு கற்பிக்கலாமாயினும்,

அவ்வாறு பொருள்கொண்டு கோசலநாட்டை அகாலமிருத்யு அல்லது யமபயம் அல்லது யமனுணை இல்லாத நாடென்று சிறப்பிப்பது உலகியலொடு பொருந்துமா? கவிகருத்தொடுபட்டதாகுமா? என்பார்க்கு ஏற்ற விடைகூறல் அரிதாகும்.

ஆகவே, 'கூற்றமில்லையோர் குற்றமிலாமையால்' என்பதற்குக் கம்பர் கருதியபொருள் யாதாயிருக்கலாமென்று ஆராய்ந்தவிடத்து அப்பாடலுக்கு முன்னும் பின்னும் உள்ள செய்யுள்களால் விளங்கிய பொருள் வருமாறு.—

நாட்டுப்படலத்தில் முதல் 38 பாடல்களால் கோசலநாட்டு மழைவளமும் நீர்வளமும் நிலவளமும் பொழில்வளமும் மலைவளமும் கடல்வளமும் தொழில்வளமும் கலைவளமும் பொருள்வளமும் மக்களியலும் அவர்கலையறிவும் அவர்பொழுதுபோக்குமுறையும் அவரனுபவங்களும் பிறவும்கூறிய கம்பர், அந்நாட்டார் மேற்கொண்டொழுகும் *அறநெறியின் சிறப்புக்கூறத்தொடங்கி அவ்வறநெறி †ஒழுக்கம், ‡வழக்கு, §தண்டம் என மூத்திறத்ததாதலின், அவற்றுள் ஒழுக்கநெறி அந்நாட்டுமக்களுக்குக் கல்வியானன்றி இயல்பாகவே அமைந்தது என்று,

---

* அறமாவது : மனுமுதலிய நூல்களில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்.

† ஒழுக்கமாவது : அந்தணர்முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.

‡ வழக்காவது : ஒருபொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார் அதுகாரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள்மேற் சொல்வது. அது கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதைநல்காமை, ஒப்பிப்பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையனல்லான்விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடுகடத்தல், நிலவழக்கு, மாதராடவர்தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு எனும் பதினெட்டுப்பதத்ததாம்.

§ தண்டமாவது : அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினாரை அந்நெறிநிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தக ஒறுத்தல். (ஒறுத்தல் - தண்டித்தல்).

"... ... ... பெறுதற்கரியதம்
குலஞ் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்"

என்னும் 38 ஆம் பாட்டின் இறுதியடியால் விளக்கியருளினர்.

குடிப்பிறந்தார்க்கு ஒழுக்கம் முதலியவை பிறர்கற்பிக்கவேண்டாமலே பிறப்பியல்பாய் அமையுமென்பது,

"இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு"

"ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந்தார்"

என்னும் பொய்யாமொழிகளாலும் அவற்றுக்குப் பரிமேலழகருரைத்த உரையாலும் விளங்கும்.

இவ்வாறு 38-ஆம் பாட்டின் ஈற்றடியால் கோசலநாட்டுமக்கள் பால் இயற்கையாக அமைந்த ஒழுக்கமேம்பாட்டை விளக்கிய இராமாவதாரநூலுடையார் அந்நாட்டாரது வழக்குநெறிச்செலா மாண்பினைக் "கூற்றமில்லையோர் குற்றமிலாமையால்" என்று அடுத்த பாடலால் வெளியிடுவாராயினர்.

இங்கே கூற்றமென்பது சொல் என்று பொருள்பட்டு, அஃது ஒருபொருளை எனது எனது என்று உரிமைகொண்டாடுவார் இருவருள் முன்னே தன்னுரிமைநாட்டமுயலுவோன் மொழியும் வழக்குரையை யுணர்த்திநின்றது. கூற்று கூற்றம் என்பன ஒரு பொருட்கிளவிகள். முன்மொழிந்தவன்வழக்குரையை மறுத்துப் பின்மொழிவோன்பேச்சு மாற்றமெனப்படும்.

முன்மொழிவார்பேச்சுக் கூற்று எனவும், அதனை மறுத்துப் பின்மொழிவார்பேச்சு மாற்றம் எனவும் வழங்குதல்,

"கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்"

என்னும் தொல்காப்பியப் பொருளதிகாரத்துச் செய்யுளியற் சூத்திரத்தாலும் அதன் உரைகளாலும் விளங்கும்.

இனிக் குற்றமென்பது மேற்கூறியவாறு பரந்துபட்ட பல பொருளொருசொல்லாயினும், அஃது ஈண்டு வழக்குரையெழுதற்குரிய இழுக்கினையுணர்த்திநின்றது. இவ்விழுக்கு கடன்கோடல் முதலிய பதினெண்டுறையினும் நிகழுதல்கூடுமாதலின் 'ஓர்குற்றம் இலாமையால்' என்றார்.

"குற்றமிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு" (1025)

என்னும் குறளுரையுள், 'குற்றமாயின அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள்' என்று பரிமேலழகர் உரைத்ததும் இங்கு நோக்கத்தகும். ஓர்குற்றமும் இலாமையால் என்பதனுள் உம்மை செய்யுள் விகாரத்தாற்றொக்கது.

எனவே கோசலநாட்டுமக்கள் வழக்குரையெழுதற்குரிய குற்றமற்றவராயிருந்தமையின் அந்நாட்டு நீதிமன்றத்து வழக்குரை நிகழவில்லையென்றவாறாயிற்று.

இவ்வாறு ஒழுக்கநெறியினும் வழக்குநெறியினும் பிறழ்ந்து பிழைபடுவார் அந்நாட்டிலில்லையெனவே அந்நெறிகளிற்பிறழ்ந்து பிழைபட்டார்க்குவிதிக்குந் தண்டமும் அந்நாட்டிலில்லை என்பது பெறப்படும். இதனையே கம்பர் அடுத்துள்ள

"நெறிகடந்து பரந்தன நீத்தமே"

என்னும் 40-ஆம் பாடலால் விளக்குவாராயினர்.

இதன்பொருள் வெள்ளமே சென்னெறிகடந்து பரந்தது என்பதாம். எனவே, மக்களில் ஒழுக்கநெறியும் வழக்குநெறியும் கடந்து பிழைத்தகன்றார் ஒருவரும் இலர் என்பதாம்.

ஆகவே இராமாவதார நாட்டுப்படலத்து 38, 39, 40-ஆம் செய்யுள்களால் முறையே ஒழுக்கமும் வழக்கும் தண்டமும் ஆகிய அறத்துறைகள் பேசப்பட்டமை தெளிவாதலால் 39-ஆம் பாட்டின் முதலடியாகிய 'கூற்றமில்லையோர் குற்றம் இலாமையால்' என்பதற்கு

"எவரிடத்தும் தீவினைச்செயல் இல்லாமையால் அகாலமிருத்யு அந்நாட்டில் இல்லை"

என்பதும்,

"அந்நாட்டில் கொலை களவு முதலிய எக்குற்றமும் இல்லாமை யால் யமனுடைய ஆணை செல்வதில்லை"

என்பதும்,

"அந்நாட்டுச் சேவர்களிடத்திற் சிறிதுகுற்றமும் இல்லாதிருத்த லால் யமபயம் இல்லை"

என்பதும், கவிகருத்தொடுபட்ட பொருளாகா என்பதும்,

"வழக்குரையெழுதற்குரிய ஒருகுற்றமும் அந்நாட்டு மக்களிடம் இல்லாமையால் வழக்குரையும் இல்லை"

என்பதே கவிகருத்தொடுபட்ட பொருளாகுமென்பதும் விளங்கி நின்றவாறு காண்க.

இங்ஙனம்,
இலக்குவன்.

பராசத்தி தோத்திரம்

குறிப்பு:—இது, பழையதோர் ஏட்டுச்சுவடியிற் கிடைத்தது; இதனை இயற்றியவர்பெயர் முதலிய விவரமொன்றும் புலப்படவில்லை. பாராயணஞ் செய்வார்க்குப் பயன்படுமென்றுகருதிக் கிடைத்த ஏட்டிலுள்ளபடி வெளியிட லாயிற்று.

இங்ஙனம்,
த. ச. மீநாட்சிசுந்தரம்பிள்ளை, திருக்குடந்தை.

கட்டளைக்கலித்துறை.

பித்தடி மைக்கண் படிநெடு மாலைப் பிராணையன்பு
வைத்தடி மைக்கொளு நாயகி யேநின் மலரடிக்கீழ்ப்
புத்தடி மைக்குடி யன்றுகண் டாயெங்கள் பூருவமாய்க்
கொத்தடி மைக்குடி காணடி காணுங் குடியிருப்பே. (க)

துதிக்குங் கவுணியக் கன்றுக்குஞ் சேய்க்குஞ் சுரந்துவெண்பால்
குதிக்குந் துணைமுலைக் கோமள மேகொள்ளை யண்டந்தந்த
விதிக்குஞ் சிவனுக்கு மாலுக்குந் தாழ்வினை யேற்குமொக்கப்
பதிக்கும் பதாம்புயத் தாள்பர மாய பராபரையே. (உ)

அரிக்கும் பிரமற்குந் தேவர்க்கும் யாவர்க்கு மாகிநடம்
புரிக்குஞ் சிவனுட னுடமைப் போதுந்தி பூக்கவந்தங்
குரிக்கும் பகிரண்டம் வேதண்டம் யாவுந்தன் னுள்ளரியாய்ப்
பரிக்கும் பதாம்புயத் தாள்பர மாய பராபரையே. (ங)

ஆலத்த ளேவெள்ளை வேதத்த ளேயத்தர் பாதிமதிக்
கோலத்த ளேநவ கோணத்த ளேகுனி முத்தலைவேல்
சூலத்த ளேவிழிப் பாசத்த ளேமதி தோய்கரக
பாலத்த ளேயடி யேன்பர மாய பராபரையே. (ச)

அருவஞ் செயும்பொரு ளைப்பல யோனியு மண்டமுமாய்
உருவஞ் செயும்படிக் கொன்றிய நாளொரு வில்லிரண்டு
புருவஞ் செயுஞ்செய லப்போ தரணைப் புணரவென்றே
பருவஞ் செயுந்தனத் தாய்பர மாய பராபரையே. (ரு)

அருகுண் டலத்துணை நீயன்றி யாரடி யேற்குத்தும்பி
முருகுண் டலங்கலலைமுகிற் கீழ்முக மண்டலமு
மிருகுண் டலமு மொருகுண் டலத்த ரிதழமுதம்
பருகுண் டலமுமுள் ளாய்பர மாய பராபரையே. (சு)

உடைக்குங் கருணைக் கடலுடை யாம லுபயமடைக்
கடைக்கண் டிறந்திங் கெமக்களிப் பாயண்டங் கண்டவனும்
துடைக்குந் தொழிலனும் பீதாம் பரனுஞ் சுமந்துநிற்கப்
படைக்குந்த்ரி கோணத்த ளேபர மாய பராபரையே. (எ)

சங்கிருந் தாளும் பிரானோ டணைவருந் தங்கள்பதம்
எங்கிருந் தாள விருந்தன ரோபொன் னிதழிமலர்க்
கொங்கிருந் தாளுஞ் சடாடவி யாரகங் கொண்ட ... ...
பங்கிருந் தாளிலை யேற்பர மாய பராபரையே. (அ)

ஒளிக்கத் தரும்பொரு ளோடுங் கலாமதி கான்றநிலாத்
துளிக்கச் சுழலு மணிவடக் கோவையுந் துய்யமுத்தி
அளிக்கத் தருமுத் திரையுங் கரகமு மாகியவெம்
பளிக்குத் திருவுரு வேபர மாய பராபரையே. (கூ)

கொங்கிட்ட பங்கயக் கோவிலெங் கேவிதிக் குக்குழைக்குச்
சங்கிட்ட நாதற்குக் குன்றமெங் கேதங்கை யாயவுனக்
கங்கிட்ட மாயவற் காழியெங் கேமுத்த மட்டிழைக்கும்
பங்கிட்ட சிற்றிலின் கண்பர மாய பராபரையே. (க0)

சலம்புரி யுங்குங் குமமிடும் பூவிடுந் தாழ்ந்திடுவீர்
நலம்புரி யும்நவ கோணத்து ளேநரைத் தாமரையின்
வலம்புரி யுந்தரு வும்பெரு வாழ்வும் வகுத்தெமக்குப்
பலம்புரி யுந்தொண்டர் காள்பர மாய பராபரையே. (கக)

சாந்தள வுந்தனஞ் சற்றே தழுவக் குழைந்தவருன்
பூந்தள வெண்ணகைக் கென்செய்வ ரோபொறி வண்டுகிண்டாக்
காந்தளம் போதிற் பணாமுடி யாயிரங் கான்றதலைப்
பாந்தளின் மேற்றுயில் வாய்பர மாய பராபரையே. (கஉ)

செஞ்சரத் திற்கொடி யார்வினைப் பாதகர் தீயவஞ்சர்
நெஞ்சரத் திற்கொடி தென்று புகாய்நீ ரவர்தமதிப்
பிஞ்சரத் திற்பர மானந்த மாகிப் பிறக்குநல்ல
பஞ்சரத் திற்கிளி யாய்பர மாய பராபரையே. (கங)

விண்டங் குதிக்கின்ற திங்க ணிலாமே ணரைப்பகுவாய்த்
துண்டங்கி யன்ன மெனச்சொல்வ ரோவுன் திருக்கொண்டலார்
வண்டங் களையும் பெறுகையி னாலுனை வாய்ந்தவிசைப்
பண்டங் கியமொழி யாய்பர மாய பராபரையே. (கச)

இருப்பை வளத்த மனங்குழை யாதவள் பாலினுஞ்சொல்
விருப்பை வளத்த வலைநடு வேதெண் டிரைதுழையாக்
கருப்பை வளத்தின் கொடிபோல ரோமங்கள் காட்டியசெம்
பருப்பை வளத்திரு வேபர மாய பராபரையே. (கரு)

காதார் குழைக்கங்கை செஞ்சடை மீது கரந்துநமக்
கேதாய் வினையு மெனவெண்ணி யேயண்டத் தெவ்வுயிர்க்கும்
ஆதார நாதன் றிருக்கரத் தாலெடுத் தம்மிவைத்த
பாதார விந்தத்த ளேபர மாய பராபரையே. (கசு)

திருக்குருகூர்த் திருப்பணிமாலை

[திரு. L. ஆதிநாதபிள்ளையவர்கள், ஆசிரியர், ஆழ்வார்திருநகரி.]

[கககஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி]

86 நாரணனைத் தொழுங்காரி நரபாலன் வரபாலன் நாவீறற்குப், பூரணசந் திரன்போலும் புதுக்குடைவேள் ளிக்குடையாய்ப் புகழச் செய்தான், வாரணமுன் னிருத்தசங்க ராமவணி கேசன்மெச்சும் மருதூராற்றிற், சீரணமா மணைபலஞ்செய் ராமபத்ர னருள்ராமன் சிலைக்கை வேளே.

87 ஏராரும் வெள்ளிச்சா மரைவெள்ளித் தீவட்டி யிரண்டிரண்டாய், வாராரும் நீள்வெள்ளிக் குடைக்காம்பு மசகிரியும் வங்காரத்தாற், சீராருஞ் சரப்பளியும் மகிழ்மாறர் மகிழ்ந்தருளச் சேர்த்தான் கச்சிப், பாராரும் பெருமையழ கியமணவா ளச்சீயர் பகவர் கோவே.

88 வையமே புகழுமா வலிவாணன் றேர்த்தளர்ச்சி வருதல் நீக்கிச், செய்யபொன் மாமேரு வெனப்புதிய தாய்ப்பெருந்தேர் சிறப்பாய்ச் செய்தே, பையரவப் புளிமாற ரெழுந்தருளச் செய்தருளே பரித்தான் ஞானம், பெய்யுமிசைத் தமிழ்த்திருவேங் கடராமானுசமுனியாம் பெருமை யோனே.

---

86 மருதூராற்றில் கெட்டுப்போயிருந்த அணையைக் கட்டிய ராமபத்திரர்மகன் ராமன் என்பவர், ஆழ்வாருக்கு வெள்ளிக்குடை செய்துவைத்தார். காரி - சடகோபருடைய தந்தை. நரபாலன் - நரர்களைக் காப்பவன்=அரசன். வரபாலன் - வரத்தாற்பிறந்த இளைஞன். காரியாகிய அரசனது வரபலத்தாற் பிறந்த சிறுவனான நாவீறனுக்கு. நாவீறன் - சடகோபன். 3-ம் அடிப் பொருள் விளங்கவில்லை. சீரணமாம் - பழுதுபட்ட. சிலை - வில். வேள் - மன்மதன்.

87 கச்சி அழகிய மணவாளஜீயர், வெள்ளிச்சாமரையிரண்டும் வெள்ளித்தீவட்டியிரண்டும் வெள்ளிக்குடைக்காம்பும் மசகிரியும் வங்காரத்தாற் சரப்பளியும் சுவாமி நம்மாழ்வாருக்குச் செய்தளித்தார்.

88 ஆழ்வாருக்கு மாவலிவாணதிராயர் செய்தளித்த தேர் பழுதுபட்டுப்போனதால் இசைத்தமிழ்வல்ல திருவேங்கடராமாநுசமுனி ஒரு பெருந்தேர்செய்தார். அதுவும் 1910வரை ஓடி 1943ல் பிரிக்கப்பட்டு வேறு வெள்ளித்தேர் செய்யப்படுகிறது. வையம் - உலகம். மாமேரு - மகாமேரு. பை - படம். அரவப்புளிமாறர் - ஆதிசேஷாம்சமாகிய திருப்புளியின் கீழமர்ந்த சடகோபர். பரித்தல் - தாங்குதல்,

89 பொருந்துநெடுஞ் சோலையெழுந் தருள்சிவிகை பொற்றகட் டாற் புனைந்து மாற, ரிருந்தருள்கூ ரலங்காரத் தாசனமும் பொற் றகட்டா லிலங்கச் செய்தான், திருந்தவருள் வானமா மலைச்சீய ருப தேசஞ் சிறந்தோன் கோயிற், பெருந்திருவேங் கடராமா நுசசீயர் மூக் கோனற் பெருமையோனே.

---

89 வானமாமலைமுனியடியார் திருவேங்கடராமாநுசசீயர் என்பவர், ஆழ்வார் தோப்புக்கு எழுந்தருளும் பொற்சிவிகைசெய்தார். அலங்கார ஆசனத்துக்கும் பொற்றகடடித்தார்.

88, 89-வது செய்யுட்களில் கூறப்படும் ஸ்ரீ நடுத்திருவேங்கடசுவாமி யைப்பற்றி ஆழ்வார்திருநகரித் திருஞானமுத்திரைப் பிரசுராலயப் பதிப் பாசிரியர் பேரியன் வே. நா. ஸ்ரீநிவாஸையங்கார் தந்தையாரான பேரியன் வேங்கட நாராயணையங்காரவர்கள் எழுதிவைத்திருக்கும் குறிப்பு வருமாறு:-

10-வது நடுத்திருவேங்கடசுவாமி (கொல்லம் 872 ஈசுவர௵ ஆனி௴ முதல் 875 விக்கிரம௵ ஆடி௴ வரை 3௵ 1௴.)

௸ கொல்லம் 875௵ விக்கிரம௵ வைகாசி உத்ஸவத்தில் சுவாமி நம்மாழ்வாருக்குப் பெரியதிருத்தேர்முடித்து ௸ திருத்தேர்கொண்டருளச் செய்தது. ௸ தேருடன் அதற்குமுன் பெரியதோப்புத் திருப்பல்லக்கும், தோளுக்கினியானும் பொன்னின்குறடும் இந்தச் சுவாமியாலேயே நடத்தி வைக்கப்பட்டுமிருந்ததாக அலங்காரமையங்கார்திருநாமம் 6-30 கீர்த்தனையால் தெரியவரும். ௸ திருத்தேர் 1088௵ பிரமாதீச வரை ௵ 214 நடப்பு.

அலங்காரமையங்கார் கீர்த்தனை. நம்மாழ்வார் திருநாமங்கள்:—

30 பல்லவி

பெரியதிருத்தேர்மீதில் மாறர்வரும் அதிசயம் பேசுதற் கெளிதாகுமோ

அநுபல்லவி

புதியதமிழ்ப்பிரபந்தம் பொன்னரங்கர் க்ருபைக்கிலக்காய்ப்
புகல்திருவேங்கடயோகி புதிதாகச் செய்த (பெரிய)

சரணங்கள்

பத்தியொடு முன்புநவ கனகமய மாய்ச்செய்த
பல்லக்குத் தங்கத்தோ ளுக்கினியான் காவீறர்
நித்தியமும் வீற்றிருக்கும் கருங்கல்லின் குறட்டைநவ
நிதியான தங்கக்குற டாய்ச் செய்த தல்லாமல்
எத்திசையுந் தொழுமாதி மால்விமானத்தை யின்னும்
இரத்தின மயமாக வேமுகிக்க இருதயத் தெண்ணிப்
புத்தமுதத் தமிழ்ப் பிரபந்தம் பொன்னரங்கர் இருபைக்கிலக்காய்ப்
புகல்திருவேங் கடயோகி புதிதாய்ச்செய்த (பெரிய)

90 பழகத் தன்பேரைப் பன்னும் படிரத்னக்
குழகத் தோளாரம் கோமாறற் கீந்தான்
அழகத் தமிழ்ச்சொலலங் காரப் பதிவாழ்
அழகுக் கழகன் அசைந் தாடும் பெருமாளே.

91 பங்கயா சனமாற ராதிமால் திருவுள்ளம் பாங்க தாக, மங்களமாய் வெள்ளியினாற் குத்துவிளக் கதனைமிகு மகிழ்வாய்ச் செய்தான், சங்கநிதி பற்பநிதி சேர்குருகை நீணகரிற் றயவாய் வாழும், எங்கள் சிக்கில் மணவாள வாதிநா தேந்த்ரனெனு மெழிற் சிங்கேறே.

6

பல்லவி

பல்லக்கின் மேல்வரும் மாறனைச் சேவிக்கப் பலகோடி கண்வேணுமே

அநுபல்லவி

மல்லொக்கும் திண்புயன் பூஞ்சோலை சூழ்கோயில்
வாழ்திரு வேங்கட மாமுனிதந்த பொற் (பல்லக்கின்)

சரணங்கள் 4

அன்ன வயல்தென் னரங்கத்தின் வந்தோன்
அம்புவியில் அண்ணன் அப்பன் கிருபை பெற்றோன்
சொன்னமு மன்னமும் பின்னையென் னாமலே
சொரியுங் கரதலத்தோன்
மன்னுபுகழ் வரமங்கையில் ரங்கப்ப
மாமுனிவ னின்னருளா லுலகோருக்கு
நன்னய மாகவே யுபயவே தாந்தமும்
நல்கு திருவேங்கட யோகிதந்தபொற் (பல்லக்கின்)

90 அலங்காரப்பதி (அணியா(ம்) நல்லூர்) அசைந்தாடும் பெருமாள், நம்மாழ்வாருக்குத் தோளாரம் ரத்தினம்பதித்துச் செய்தளித்தார். பன்னும்படி - சொல்லும்படி. குழகு - அழகு.

91 சிக்கில் மணவாள ஆதிநாதேந்திரர், ஆழ்வார்க்கும் ஆதிநாதர்க்கும் வெள்ளிக்குத்துவிளக்குச் செய்துவைத்தார். பங்கயாசனம் - பத்மாசனம். மாறர் - சடகோபர். ஆதிமால் - ஆதிநாதப்பெருமாள்.

92 மன்னனெனும் சடகோப தாதன்செய் தேர்த்தளர்ச்சி வரு தல் நீக்கிச், செந்நெல்வயல் சூழ்குருகைத் தலத்தா ரினுத்தாரச் செய்தி கேட்டுப், பன்னுதமிழ் மாறரெழுந் தருள்திருத்தேர் நல மாகப்பலனுய்ச்செய்தான், எங்கிலமும் புகழவரு சீனியாழ் வாரப்பன் எழிற்சிங் கேறே.

93 மேருலா மசகிரிக்கு வெள்ளிக்கால் தங்கப்பூ விளங்கச் செய்து, சீருலாங் கவரிரத்தி னப்பதக்க முஞ்சிறப்பா யம்ப ரம்மும், பாருலாஞ் சக்கரவா ளக்குடையும் மாறர்க்குப் பணிவாய்ச் சேர்த் தான், காருலாஞ் சென்னபட்டணம் ... பூபாலன் கன்னல் வேளே.

94 பாரெங்குங் கொண்டாடு மாதிமாலைத் தினம்ப ணிந்துபகர் வித், தாரங்க ளாக்கவி பாடு மாழ்வார்க்குத் தயவாய் நல்ல, நேரங்க டொறமுடிக்கு மகிழப்பூங்கொண் டையணி நிலவச்சேர்த் தான், சீரங்க மேவியரா மாநுசையங் காரேன்னுஞ் செங்கண்மாலே.

95 அத்திக் கபயங் கொடுத்தரு ளாதிமா லைத்தொழுது, நித் திய மாழ்வா ரெழுந்தரு ளற்கு நியமமதாய்ச், சித்திரம் போற்சின் னப் பல்லக்குச் செய்து சிறப்பேபெற்றுன், பத்தியக லாதநுப்பை யாண்டானெனம் மகிபதிபா வலவர் கோவே.

---

92 குருகைத்தலத்தார் அநுமதிகொண்டு மாசித்தெரு ஒப்பனையன் கூட்டத்துச் சீனியாழ்வாரப்பபிள்ளை மாசித்தேர் செய்தார். அது பழுதுற்ற பின் தற்காலமுள்ள தேர் செய்யப்பட்டது. கொல்லம் 955-ல் காசிச்சாமி யார் மாசித்தேருக்குர், வாய்க்காலின்கரை மாசித்தெரு விநாயகர்கோயிலுக் கும், திருச்செந்தூர் முருகன்கோபுரம் பழுதுபார்த்தலுக்கும் அடியிட்டு முடித்துவைத்தார். உத்தாரம் - அனுமதி.

93 மசகிரிக்கு வெள்ளிக்காலும், தங்கப்பூவும், பொற்கவரியும் ரத் னப்பதக்கமும் பொன்னுடையும் குடையும் செய்தார். இச்செய்யுளின் ஈற் றடியால் இத்தப்பணிசெய்தவர் பெயர் நன்கு தெரியவில்லை.

94 சீரங்க ராமாநுஜையங்கார் ஆழ்வாருக்கு மகிழ்ப்பூக்கொண்டை செய்தார். ஆதிமால் - ஆதிநாதர்.

95 நுப்பையாண்டான் என்பவர், சின்னப்பல்லக்கை நம்மாழ்வாருக் குச் செய்தார். அத்தி - யானை = கஜேந்திரன்.

96 மருக்கமழும் பூஞ்சோலைத் திருக்குருகூர் நம்மாழ்வார் மகிமை யோங்கப், பெருக்கமுறு வாய்மொழி ப்ரபந்தமுரை செய் தருளும் பெருமான் போற்ற, இருக்குமுதற் பொருளாகு மாதிமா லெழுந்தருள வியல்பா யிந்நாள், திருக்குலவு கமலத்தேர் நவமா கத் தலத்தார்கள் செய்வித்தாரே.

97 சிங்கவா கனஞ்சிகரம் புதுக்கி வெள்ளி வாரவுலாத் திரு மாற் காக்கிப், பொங்கார்வ முத்தரங்கன் சிறப்பாமைப் பசியூஞ்சற் பொலிவி ழாவீர், சங்கவான் றமிழ்மாறர் மாயனூர்க் கியற்றியிசை தழைத்தான் செஞ்சொல், பங்கவர் களைத்தினம் பரவுதிரு மலைக் கொழுந்தன் பருவை யானே.

98 சொன்னவ லோர்துதிக்கு நம்மாழ்வா ருரைப்ரபந்தஞ் சூடச் செய்வார், நன்னக ரிகரென்னு மாதிநா ராயணர்க்கு நலம தாக, முன்னாளில் முடித்தரத மல்லாது தலத்தார்கள் முக்கிய மாக, இந்நாளிற் பங்குனித்தேர் முடித்துநடத் தியருள வினிதுற் றாரே.

99 கறைபடிக்கு முன்னுதித்த கருணைமா லாதிபதங் கருத்திற் போற்றி, நறையொழுகுமொழியுரைத்தஞானதேசிகருக்குநன்மை

---

96 ஆதிநாதருக்குத் தாமரைவடிவான வட்டத்தேரைத் தலத்தார் 928ம் ஆண்டிற் செய்து சித்திரைத்தேராகவைத்தார்கள் A. D. 1853. மரு - நன்மணம். வாய்மொழி - திருவாய்மொழி. இருக்கு - வேதம். கமலம் - தாமரை. நவம் - புதிது.

97 இதன் நான்காமடிக்குப் பொருள் விளங்கவில்லை. பருவையான் திருமலைக்கொழுந்தன் என்பவர், ஆதிநாதருக்குச் சிங்கவாகனமும் சிகரமும் புதுக்கி, வெள்ளிவாரவுலாவும் ஏற்படுத்தினர்; முத்தரங்கனியற்றிய ஐப்பசி ஊஞ்சல்விழாவை ஆழ்வார் பெருமாள் இருவருக்கும் நடத்துவித்தார். இதனுள் பருவையான் என்றிருப்பது பழவையான் என்று இருக்கலாம் என்று தோன்றுகிறது.

98 தலத்தார் இந்நாளில் ஆதிநாதருக்கு பங்குனித்தேர் ஒன்று செய் தோட்ட எண்ணி முன்வந்தனர். முன் தேர் வேறுண்டு. அது பழுதாயிற்று.

99 வரதாசாரியரென்பார் நம்மாழ்வாருக்கு ஒரு புதிய கவர்விளக்குச் செய்தளித்தார். கறையடி - யானை = கஜேந்திரன். நறை - தேன். நறை

யாகத், தறைபுகழ் கவர்விளக் கொன்றபுதி தாயியற்றித் தவமே பெற்றான், மறையவர்சூழ் துரந்தரிகன் வரதாசா ரியனென்னு மகிமையோனே.

100 செய்யமலர்த் தடஞ்சூழும் பொருனைநதிக் குருகூரிற் சிறப்பா யோங்கப், பையரவிற் றுயிலாதி மால்ஞான தேசிகற்குப் பரிவாய் நல்ல, துய்யமணிக் கவர்விளக்கு மூன்றுடனே படித்தர நெய் துலங்கச் செய்தான், ஐயனுறை யயோத்திநகர் வருராம தாசனெனு மதுலன் றானே.

101 முச்சகமெல் லாம்புகழுங் குருகைநக ராழ்வார்க்கு முதிய வேதம், இச்சையுட னேதுதிக்கு மாதிநா ராயணர்க்கு மெவரும் போற்ற, வுச்சிதஞ்சே ருஞ்சல்சப் பிரமிரண்டு முடித்துமிக்கா யுதவச் செய்தான், கச்சிநகர் மேவிவளர் கஸ்தூரி ரங்கையன் கருணைமாலே.

102 வேதமொழி யாய்த்திருவாய் மொழிப்ரபந்தம் விரித் துரைத்த வீர தொண்டர், பாதகமெல் லாந்தவிர்க்கு நம்மாழ்வா ரணியரத்னப் பதக்க மீந்தான், சீதவத னும்புயவேள் திருவல்லிக் கேணிநகர் செழிக்க வந்தோன், பூதலமெல் லாம்புகழும் வேங் கட்ட ரங்கப்ப பூபன் றானே.

யொழுகுமொழி - இனிமைபெருகும் திருவாய்மொழி. ஞானதேசிகர் - சட கோபர்.

100 அயோத்தி ராமதாசன் என்பவர் ஆழ்வாருக்கும் ஆதிநாதர்க்கும் மூன்று கவர்விளக்கும் அவையெரிய நெய்யும் துலங்கச்செய்தார். பை-படம். அரவு - பாம்பு. அரவென்றது இங்கு ஆதிசேடனை. பரிவாய் - அன்பாய். பொருநை - தாம்பிரபருணி. அதுலன் - ஒப்பில்லாதவன். ஆதிமால் - ஆதி நாதர். ஞானதேசிகன் - சடகோபன்.

101 கச்சிக் கஸ்தூரிரங்கையன் என்பவர் ஆழ்வார் ஆதிநாதர் ஆகிய இருவருக்கும் இரண்டு ஊஞ்சலும் சப்பரமும் செய்துதவினர்.

102 திருவல்லிக்கேணி வேங்கட்டரங்கப்பன் என்பார் நம்மாழ்வார் அணிய ரத்தினப்பதக்கம் அளித்தார். சீதம் - குளிர்ச்சி. வதனம்புயம் - முகதாமரை.

103 காருலவு குருகைநகர் மேவியநம் மாழ்வார்க்குக் கருணை வைத்தே, மேருவென விளங்கரா மாநுசபீ டந்தன்னை விநய மாக, வேருலவு தங்கத்தாற் றகடடித்துப் பொருத்தியிசை யெய்தி நின்றான், பாரசர் புகழவரும் வேங்கட்ட ரங்கப்ப பாக்கியன் றானே.

104 குருகைநகர் வளர்நெடுமா லாதிநா தருக்கும் குலவுநம் மாழ்வார்க்கு மனங்குளிர்ச்சி யாகத், திருவுலவு மஞ்சனத்தட் டும் மாலைத் தட்டும் திகழ்செம்பும் வெள்ளியினாற் றிறமாகச் செய்தே, இருநிலம் புகழக்கட் டியத்தடியும் வெள்ளி யினாற்கருட சேவையு மிலங்கிடவே செய்தான், கருதலர்வந் தடிபரவும் சகவீர ராம கட்டப் பொம் மேந்திரனெனுங் கருணை மாலே.

105 பார்புகழுங் குருகைநக ராதிமா லிருசரணம் பணிந்து போற்றும், காருலவு வடகீழை மூலைமதிட் கொலுவிருக்கும் கருடனார்க்கு, மேருவென விளங்கவிரு தீபகம்ப முஞ்செய்து மேன்மை பெற்றான், சீருலவு புயவீமன் சொக்கநா தேந்த்ர னெனுஞ் செயசிங் கேறே.

106 செகமேழுந் துதித்திடநம் மாழ்வார்க்கு வைகாசித் திருவிழாவில், மகிழ்வாகக் கோளூர்மண் டபப்படியு நடத்திமார் கழி மாதத்தில், புகழ்மீறுஞ் சாத்துமுறைக் கிசைந்தசிங்கா சனமுமிகு பொற்பாச்செய்தான், பகர்நாட்டுக் கணக்கினிய பரியேறும் பெருமா ளாம் பாக்கியவானே.

---

103 வேங்கட்டரங்கப்பன் என்பவர் நம்மாழ்வார்க்கு ராமாநுசபீடத்தைத் தங்கத்தகடடித்துப் பொருத்தி வழங்கினர். கார் - மேகம்.

104 ஜகவீரராமகட்டப்பொம்மேந்திரன் என்பவர் ஆதிநாதர்க்கும் ஆழ்வார்க்கும் திருமஞ்சனத்தட்டும் மாலைத்தட்டும் செம்பும் கட்டியத்தடியும் கருடனும் வெள்ளியாற் செய்தளித்தார்.

105 சொக்கநாதநாயக்கர் என்பவர் (1704—31) பட்சிராஜருக்கு இரண்டு தீபஸ்தம்பம்செய்து நாட்டி விளக்கேற்றச்செய்தார்.

106 நாட்டுக்கணக்கராகிய பரியேறும்பெருமாள் என்பவர், நம்மாழ்வாருக்கு வைகாசிவிழாவில் திருக்கோளூர்மண்டபப்படியும் மார்கழிவிழாவில் சாத்துமுறைச் சிங்காதனமும் அமைத்துதவினர்.

107 முதுவேதர் தமிழாக நம்மாழ்வா ரந்நாளில் மொழிந்த பாடற், பதிவாகக் கொண்டருளும் பொலிந்துநின்றார் சந்நிதிக்கே பரிவு கூர்ந்தே, புதிதாக வெண்கலத்திற் சரவிளக்குண் டாக்கி வைத்துப் புகழே பெற்றான், துதியாதி நாதையன்சொல் வேங்கட கிட் ணையனெனுஞ் சுகிர்த வேளே.

108 அருண்மிகுதொள் ளாயிரத் தெண்பத் திரண்டாண்டி லானபிர பவவருடமாம் அன்புடன் குருகைநகர் வைகாசி யுற்சவத் தஞ்சான திருநாளிலே, வரிசைபெற மாதிமால் கள்வர்விசை யான வர் மகிழ்ந்துகாய் சினவேந்தரும் மங்கலத் திருவர்மா யக்கூத்தர் வாழ்வைத்த மாநிதி குழைக்காதரும், இரு நிலம் புகழவொன் பதின்மரொன் பதுகருட னேறிவர மகிழ்மாறரும் இசையன்ன மீதேறி வரமதுர கவிபணிய வென் றுநன் றாய்ச்செய்தனன், தரும மிகு பண்டினகர் வேங்கட்ட ராமவேள் தயாளுவருள் வரபாலனே தருவாக வுதவிசெய வருராம சாமியித் தாரணி புகழ்ந்தேத்தவே.

109 அருமறைகள் போற்றுமா லாதியுடன் நம்மாழ்வார்க் கன்பு கூர, இருநிலமெல் லாம்புகழக் குருந்துவா கனநாளு மியல்பா யோங்க, வரிசைபெற லட்சுமி புரத்தில்மண் டபப்படியும் மகிழ் வாய்ச் செய்தான், புருடமக மேருவெனும் துரைதிருப்பாற் கட லுதன் புகழ்வல் லோனே.

[தொடரும்.]

---

107 ஆதிநாதர்முன் வெண்கலச்சரவிளக்கை வேங்கடகிருஷ்ணையன் என்பவர் செய்துவைத்தார்.

108 பண்டில் ராமசாமிநாயக்கர் என்பவர், 982-ம் யாண்டில் பிரபவ வருடம் (1807-கி. பி.) நவதிருப்பதிக் கருடசேவையுடன், ஆழ்வார் அன்னத் திலும் மதுரகவி தோளுக்கினியானிலும் புறப்பாடும் நிகழ ஏற்பாடு செய்தார்.

109 திருப்பாற்கடலுதபிள்ளை என்பவர், ஆழ்வார்க்கும் ஆதிநாதருக் கும் குருந்தவாகனஞ்செய்தார். லட்சுமிபுர மண்டபப்படி ஏற்படுத்தினர். ஆதி - ஆதிநாதர்.

உ

பெண்களுக்குப் பெருந்தகைமை கற்பே

[உயர்திரு. சி. கணேசையரவர்கள், வருத்தலைவிளான், யாழ்ப்பாணம்.]

பெண்களுக்குப் பெருந்தகைமையைக் கொடுப்பது கற்பே யாகும். அதுபற்றியே திருவள்ளுவரும்,

> "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மையுண் டாகப் பெறின்"

என்று கூறினர். ஆதலால், பெண்கள் எப்போதும் தங்கள் கற்பு நிலைமையை உள்ளத்தோடுபொருந்தப் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு பாதுகாக்காதுவிட்டால், அகலிகைபோலச் சாபமெய்தவேண்டும். திருவள்ளுவரும்,

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்றும்,

> "சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
> நிறைகாக்குங் காப்பே தலை"

என்றும் கூறினர். நிறை - மனத்தைக் கற்பின்வழி நிறுத்தல்.

தம் உயிரிழப்பவரினும் தம் கற்பினைக் காத்துநிற்குநிலையே திண்மை (கலங்காநிலைமை) என்று சொல்லப்படும். கற்புடைமகள் தன் கணவனன்றிப் பிறர் தன்னைத் தீண்டவரின் உடனே தன்னுயிரைவிடுவாள். இதற்குச் சான்றாக, இராவணன் திக்குவிசயஞ் செய்தபோது, குசத்துவசன்புதல்வி வேதவதியென்பாள் தவஞ் செய்திருந்தகாட்டை அடைந்தபோது, அவளைக் கண்டு காதலித்து அவளைத் தீண்டியசமயத்து அவள் அவனை நோக்கி, 'உனக்கும் உன்குலத்திற்கும் யானே கேடுவிளைப்பேன்' என்று சாபமிட்டுவிட்டு உடனே அக்கினிப்பிரவேசஞ்செய்தாள் என்றும், அவளே சீதையாய்ப் பிறந்தாளென்றும் இராமாவதாரத்து உத்தர காண்டத்தில் அகத்தியமுனிவர் இராமபிரானுக்குக் கூறுமாற்றான் அறிந்துகொள்க. அக்கதையை,

"வாடா மலரோன் வரச்செருக்கான் மற்றெனை
கூடா தனசொல்லிக் கூசா து தீண்டினையால்
ஏடா விலங்கைக்கு முன்றனக்கு முன்னிளைக்கும்
கேடாகத் தோன்றவே னென்றாள் கிளர்சினத்தாள்"

"வானோர் மகிழ்ந்து மலர்மா மழைபொழிய
ஏனோர்க ளெல்லா மினிப்பிழைத்தே மென்றியம்பக்
கானா ரருந்தவத்தர் கண்டு வியப்பெய்தத்
தேனார் மொழிமடவாள் செந்தழலின் மூழ்கினாள்"

"வன்னி யிடைமூழ்கி மாதவத்தாள் மாச்சனகன்
தன்னுடைய வேள்வித் தரணியிடை வந்துதிப்ப
அன்னவளை முன்னா ளமிழ்திற் பிறந்தாளைப்
பொன்னொளிசேர் பூணினாய் வில்லிறுத்துக் கைப்பிடித்தாய்"

என்னும் உத்தரகாண்டச்செய்யுட்களான் அறிந்துகொள்க.

இன்னும், சீதை இராவணனுடைய சுயவடிவைக்கண்டு அஞ்சி மனங்கலங்கிய போது, அவ்விராவணன் சீதையைநோக்கி, 'அன்னமே! நீ மனங்கலங்காதே; உன்னை யான் என் பத்துத்தலைகளிலும் தனித்தனிவைத்துச் சுமந்து கொண்டாட என் அரசச்செல்வத்து ளிருக்குதி' என்றான். அப்போது சீதை தன் செவிகளைப் பொத்திக்கொண்டு, சிறிதும் அஞ்சாது, "அரக்கா! முனிவர் வேள்வியிற் கொடுக்கும் அவியை நாய்விரும்பியதுபோல நீ காகுத்தன் மனைவியாகிய என்னை விரும்பி என்ன சொன்னாய்! புல்நுனியில் நீர்போல அற்பநேரத்தில் அழியும் என்னுயிரை விடுதற்கஞ்சி, என் குடிப்பிறப்பிற்குரிய வொழுக்கத்தை விடுவேனோ? என் கணவனுடைய அம்பு உன்னுடைய மார்பை யூடுருவாமுன்னம் ஓடி ஒளிக்குதி" என்றாள். அதனை,—

"புன்னுனை நீரி னொய்தாய்ப் போதலே புரிந்து நின்ற
இன்னுயி ரிழத்த லஞ்சி யிற்பிறப் பழித லுண்டே
மின்னுயிர்த் தருமிற் சீறம் வெங்கணை விரவா முன்னம்
உன்னுயிர்க் குறுதி நோக்கி யொளித்தியா லோடி யென்றாள்"

(சடாயுவுயிர். ௭0)

என்னும் செய்யுளால் அறிக.

இங்ஙனம் சீதைகூறியது தன் கற்பென்னுந் திண்மையினாலன்றோ? இங்ஙனங் கூறியதுமாத்திரமா? இராவணன் தன்னைக் கொண்டுபோய்வைத்த சிறையிலிருக்கும்போது, ஒருநாள் அவன் தன்னிடம்வந்து தன் காமநோயை நீக்கியருளுமாறு இரந்தபோதும், சீதை மிக்க கோபமுற்றவளாய்க் கணவன்முகத்தையன்றிப் பரபுருடர்முகத்தைப்பெண்கள் நோக்கல்கூடாது என்னும் நியமத்தினாலே, தன்முன்னே ஒரு துரும்பை நிறீஇ, அதனை நோக்கித் 'துரும்பே! நீ கூறிய இவ் வெய்யசொல் இல்லறவொழுக்கத்திலிருக்கும் பெண்களுக்கு ஏற்றதன்று. நீ என் நாயகன்வலியை அறிந்திருந்தும் நல்லொழுக்கிற்கேற்றதல்லாத வார்த்தையைச் சொல்லுகின்றாய். அதனால் அவனம்பால் தலைபத்துஞ் சிந்தப் போகின்றாய். வஞ்சனை மானையேவி என்கணவனை அதன்பின்னே போக்கி, அவன் தம்பியும் இல்லாதசமயம் நோக்கி என்னை வஞ்சனையாற் கவர்ந்தது என் கணவற்கஞ்சியன்றோ? உன்குலத்துக்கெல்லாம் நஞ்சாய் உள்ளேன் யான். என்னை நீ நோக்கில் உன் குலத்துக்கே நாசமாகும். நீ மிக்க வலிமையுடையவன்போலப் பேசுகின்றாய். முன் சடாயுவென்னும் ஒருபறவையால் அடிக்கப்பட்டுப் பூமியில் வீழ்ந்தாய்; சிவன்வாளாலன்றோ அதனை வென்றாய்; உன் வாழ்நாள், வரமென்று குறித்த நியதியெல்லாம் என் கணவன்விடும் சரத்திற்கும் உண்டோ? என் கணவன்விடும் சரம்வந்து உன்னை ஊடுருவுமட்டுமே அவை நிலைபெறும். அப்பால் அழிந்தொழியுமன்றோ. நீ எடுத்தேனென்று வீரம்பேசும் கயிலைமலையிலிருக்கும் இறைவன்வில்லையன்றோ என்பொருட்டு என்கணவன் முரித்தது. அங்ஙனம் முரித்தசத்தம் உன்காதிற்குக் கேட்கவில்லையா? நீசெய்த இக் கொடியசெயலால் உலகமெல்லாம் அழியுமென்று யான் அஞ்சுகின்றேன். இதற்குத் தருமம் சான்றாகும். என்னாயகனை ஒரு மனிதன் என்று இகழுகின்றாய். உன்னைப்பற்றி உன்வாய்வழி இரத்தஞ்சொரியக் குத்திச் சிறையில்வைத்த கார்த்தவீரியார்ச்சுனனுடைய ஆயிரம்புயங்களையும் மழுவால்வெட்டிய பரசுராமன் இருகையுடைய ஒருமனிதனல்லனோ? அத்தகைய பரசுராமனும் என்னாயகனுக்குத் தன்வலியிழந்து தோற்றுப்போனதை நீ கேட்டிலையோ? உனக்கு இடித்துப் புத்திசொல்வா ரில்லைபோலும். இல்லாத

போது முடிவுகாலமே உனக்கு வந்து முடிவது முடிபாகும்' என்றும் கூறினாள். இவ்வாறு கூறியதும் அந்தக் கற்பின் திண்மையன்றோ? இவ்வாறு கூறியன்தச் சுந்தரகாண்டத்து நிந்தனைப்படலத்துள் வரும்,—

"மல்லடு திரடோள் வஞ்சன் மனம்பிறி தாகும் வண்ணம்
கல்லொடு தொடர்ந்த நெஞ்சங் கற்பின்மேற் கண்ட துண்டோ?
இல்லொடு தொடர்ந்த மாதர்க் கேய்வன வல்ல வெய்ய
சொல்லிது தெரியக் கேட்டி திரும்பெனக் கனன்று சொன்னாள்"

"மேருவை யுருவவேண்டின் விண்பிளந் தேகல் வேண்டின்
ஈரேழு புவனம் யாவு முற்றுவித் திடுதல் வேண்டின்
ஆரியன் பகழி வல்ல தறிந்திருந் தறிவி லாதாய்
சீரிய வல்ல சொல்லித் தலைபத்துஞ் சிதறு வாயோ"

"அஞ்சினை யாத லான்ன் ரூரிய னற்ற நோக்கி
வஞ்சனை மானுென் றேவி மாயையான் மன்றந்து வந்தாய்
உஞ்சனை போதி யாயின் விடுதியுன் குலத்துக் கெல்லாம்
நஞ்சினை யெதிர்ந்த போது நோக்குமே நின்து நாட்டம்"

"தோற்றனை பறவைக் கன்று துள்ளுநீர் வெள்ளஞ் சென்னி
ஏற்றவன் வாளால் வென்று யன்றெனி னிறத்தி யன்றே
கோற்றகோன் புடைய வாழ்நாள் வரமிவை நுனித்த வெல்லாம்
கூற்றினுக் கன்றே வீரன் சரத்திற்குங் குறித்த துண்டோ"

"குன்றுநீ யெடுத்த நாட்டன் சேவடிக் கொழுந்தா லுன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரந் துரந்த மேரு
என்றுணைக் கணவ னூற்றற் குரனிலா திற்று வீழ்ந்த
அன்றுயர்ந் தெழுந்த வோசை கேட்டிலை போலு மம்மா"

வேறு

"மானுட ரிவரென மனங்கொண் டாயெனின்
கானுயர் வரைநிகர் கார்த்த வீரியன்
தானொரு மனிதனூற் றளர்ந்து ளானெனின்
தேனுயர் தெரியலான் றன்மை தேர்தியால்."

வேறு

"ஆயிரந் தடக்கை யானின் னெண்ணான்கு கரமும் பற்றி
வாய்வழி குருதி சோரக் குத்திவன் சிறையில் வைத்த
ஆயவன் வயிரத் தோள்க டுணித்தவன் றலைக்த மாற்றம்
நீயறிந் திலையோ வேகு நெறியறிந் திலாத நீசா"

"கடிக்கும்வல் லரவுங் கேட்கு மந்திரங் களிக்கின் றேயை
அடுக்குமீ தடாதென் றூன்ற வேதுவொ டறிவு காட்டி
இடிக்குந ரில்லை யுள்ளா ரெண்ணிய தெண்ணி யுன்னை
முடிக்குந ரென்ற போது முடிவன்றி முடிவ துண்டோ"

என்னுஞ் செய்யுட்களான் அறிக.

இனி, அக்கற்பின் திண்மையுடையாள்சொல்லைத் தெய்வமும் கேட்டுநிற்கும். அதுபற்றியே திருவள்ளுவரும்,—

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்று அருளிச்செய்தார்.

கற்புடையாள்சொல்லைத் தெய்வமுங்கேட்கும் என்பதற்குச் சான்று, அரக்கர்கள் அநுமன்வாலிற் கிழிசுற்றி எண்ணெய்பெய்து நெருப்புக்கொளுத்திவிட்டபோது, அதனைக் கேட்ட சீதை அக்கினியைநோக்கி 'அக்கினியே! உலகுக்கெல்லாம் சான்று நீயே. யான் கற்புடையேனாயின் அநுமன்வாலைச் சுடாதே' என்றாள். அதனையறிந்த அக்கினிதேவன் அவன் வாலைச் சுடாது குளிர்ந்தான் என்பதனால் அறியலாம். அதனை,

"தாயே யனைய கருணையான் றுணையே யேதுந் தகவில்லா
நாயே யனைய வல்லரக்கர் நலியக் கண்டா னல்காயோ
நீயே யுலகுக் கொருசான்று நிற்கே தெரியுங் கற்பதனிற்
றூயே னென்னிற் றொழுகின்றே னெரியே யவனைச் சுடேலென்றாள்"

"வெளுத்தமென் னகையவள் விளம்பு மேல்வையின்
ஒளித்தவெங் கனலவ னுள்ள முட்கினான்
தளிர்த்தன மயிர்ப்புறஞ் சிலிர்ப்பத் தண்மையால்
குளிர்த்தவக் குரிசில்வா லென்பு கூரவே"

என்னுஞ் செய்யுட்களான் அறிக.

இங்ஙனம் சீதை தன் கற்பின் தெய்வத்தன்மையால் அக்கினியை வேண்டி அநுமன்வாலேச் சுடாது குளிர்வித்ததுபோலவே, வீரபத்தினியாகிய கண்ணகியும் தன் இடமுலேயைத் திருகியெறிந்து அக்கினியை ஏவி மதுரையை வேவச்செய்தாள். அதனைப்,

"பார்ப்பா ரறவோர் பசுப் பத்தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய
பொற்றொடி யேவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூட னகர்"

எனவரும் சிலப்பதிகாரச் செய்யுளடிகளான் அறிக.

இங்ஙனமெல்லாம் முற்காலத்திருந்த பெண்களுட் பெரும்பாலார் தங்கள் கற்பினுலே பெருந்தகைமையும் தெய்வத்தன்மையையும் அடைந்திருந்தார்கள். இக்காலத்தில் இதற்கு மாருகப் பெண்களுட் பெரும்பாலார் ஆங்கிலநாகரிகத்தைமேற்கொண்டு தம்முடைய ஒழுக்கமுறையை மாற்றிக்கொண்டார்கள். பரபுருடர்களோடு சமமாக இருந்து நகைத்துப்பேசுகின்ருர்கள்; பரபுருடர்களைக் கைகொடுத்து வரவேற்கின்ருர்கள்; பழையமுறையெல்லாம் பிழை என்கிருர்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் தமிழ்நூல்களைப் படித்தறியாமையே. ஐம்பொறிகளையும் அடக்கியவனுயினும் தன்நாயகனல்லாத பரனைத் தீண்டலாகாதென்று அநுமனுக்குச் சீதை கூறுகின்ருள். அதனை,

"வேறு முண்டுரை கேளது மெய்ம்மையோய்
ஏறு சேவகன் மேனியல் லாவிடை
ஆறு மைம்பொறி நின்னையு மாணெனக்
கூறு மிவ்வுருத் தீண்டுதல் கூடுமோ"

என்னுஞ் செய்யுளால் அறிக. ஆகையால் நம்நாட்டுப் பெண்கள் பழைய ஒழுக்கங்களைக் கைவிடலாகாது.

ஸ்ரீ:

நாலடியார்—இருவருரைத்திருத்தம்

[திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்]

முன்னுரை.

நாலடியார் பழைய நீதிநூல்களான கீழ்க்கணக்குநூல்களில் முதலாவதாகவைத்து எண்ணப்படுவது; "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழியால் திருக்குறளோடு ஒத்த பெருமையுடையதாகக் கருதப்படுவது. இதன்கண் உள்ள நானூறுவெண்பாக்களும் பண்டு மதுரையிலிருந்த ஜைனவித்வான்கள் பலராற் செய்யப்பட்டுப் பின்னர்வந்தவொருவரால் நாற்பது அதிகாரங்களாகத் தொகுக்கபெற்ற ஒரு நூல் இதுவென்று சொல்லுவர். இந்நூல் பரிமேலழகர் முதலான உரையாசிரியர்களால் மேற்கோளாகத் தம்முரையின்கண் எடுத்தாளப்பெற்ற பெருமையுடையது. இதற்குப் பதுமனார் என்ற ஜைனப்புலவர் ஒருவராற் செய்யப்பட்ட பழையவுரையொன்று உண்டு. இனி வேதகிரிமுதலியார்செய்தவுரையும் ஒன்றுண்டு.

சமீபகாலத்தவர்களான ஸ்ரீ வை. மு. சடகோபராமாநுஜாசாரியர், சே. கிருஷ்ணமாசாரியர் என்ற பிரபலவித்வான்கள் இருவரால் எழுதப்பட்ட விரிவுரையுடன் இந்நூல், சற்றேறக்குறைய 50 வருஷங்களாகத் தமிழ்பயில்வார்க்குப் பயன்பட்டுவருகிறது. சில மாதங்களாக யான் இவ்வுரைநூலை ஆராய்ந்துவருகையில் இவ்வுரையிற் பலவகையான பிழைகள் [அங்கங்கே சில பாடல்களுக்கும் தொடர்மொழிகளுக்கும் உரியபொருள் காணப்படாமை, பிழைபட்ட இலக்கணக்குறிப்புக்கள், பொருந்தாமேற்கோள்கள், அவசியமில்லாக் கதைகள், சொற்பெருக்கம் முதலியன] காணப்பட்டன. அவற்றைத் திருத்தியெழுதினுல் தமிழ்பயில்வார்க்குப் பயன்படுமென்றெண்ணி அந்தவேலையைச் செய்துவருகிறேன். திருத்திய அளவிற் சிறிதுசிறிதாக இச்செந்தமிழ்ப்பகுதி முதல் வெளிவருகிறது.

"காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே" (அறநெறிச்)

யாக்கைநிலையாமை, பாட்டு—10

1 கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

இதன்பொருள்:— மாந்தர்கள் - மனிதர்கள், கேளாதேவந்து - வீட்டாரின் சம்மதம்பெறாமல் தாமாகவந்து, கிளைகளாய் - உறவினர்போல, இல் தோன்றி - (தாமிருக்கவேண்டிய கால அளவு) வீட்டிற் காணப்பட்டு, சேக்கை - தம் கூடுகள், வாளாது - பயனில்லாமல், மரன் ஒழிய - (தம்மைவிட்டு) மரத்தில் நீங்கிக்கிடக்க, சேண் நீங்கு புள் போல-நெடுந்தூரம் நீங்கிப்போகின்ற பறவைகள்போல, யாக்கை - தம்முடம்புகள் (வாளாது) தமர்க்கு ஒழிய - உறவினர்க்குப் பயனில்லாமல் வீட்டிற்கிடக்க, இல்நீத்து - தாம் இருந்த வீட்டையும் நீக்கி, வாளாதுபோவர் - (இங்குப் பிறந்ததின்பயனாக) ஒன்றும் பெறாமல் சாவர்.

இவ்வாறு பிறந்திறப்பது போதாது; இம்மைமறுமைகட்குரிய புகழும் ஞானமும் அறமு மாகியவற்றைத் தேடிக்கொள்ளவேண்டும் என்பது குறிப்பெச்சம். வருகின்ற அறன்வலியுறுத்தலதிகாரத்திற்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளது இப்பாட்டு.

மாந்தர் என்பது மாக்கள் என்பதுபோல ஆறறிவுபெறாத மனிதர்க்குப் பெயராய்ப் பயின்றுவருதல் காண்க. "மறைந்தொழுகு மாந்தர் பலர்" (குறள் 278); "திருந்துநீர்மாந்தர்போல" (சீவக. இலக்கணை,158). வாளாது என்பது பயனின்மைப்பொருளையுணர்த்தும் வாளா என்னும் இடைச்சொல்லடியாகப்பிறந்த வினையெச்சம். சேக்கையினின்றும் நெடுந்தூரம் நீங்கின புட்கள் மீண்டும் அதனைநினைத்துக்கொண்டு வாரா என்பதும், வேறுபுட்களும் அச்சேக்கையைப் பயன்படுத்திக்கொள்ளா என்பதும், அது பயனின்றி மரத்திற்கிடக்கும் என்பதும் சிலசாதிப்புட்களிற் கண்ட அநுபவம். பறவைகள் தாம் விரும்பியபடி மரத்தைப் பயன்படுத்திக்கொண்ட பிறகு, அதற்கு ஒருவாற்றானும் பயன்படாத கூட்டை அங்கே

கிடத்தி அம் மரத்தையும்விட்டுப் போதல்போல மாந்தரும் தாம் விரும்பியபடி ஒருகுடியைப் பயன்படுத்திக்கொண்டு அக்குடியினர்க்கு ஒருபயனுமின்றித் தம் உடம்புகளைத் தள்ளிவிட்டுத் தாமிருந்த குடியையும் மறந்துபோய்விடுவர் என்பது உவமையாற் கிடைத்த பொருளாம். புள் உவமை. மாந்தர்கள் உபமேயம் அல்லது பொருள். தாம் விரும்பியபடி வந்துபோதலும் போகும்போது தங்கூட்டைத் தள்ளிவிட்டுப்போதலும் பொதுத்தன்மை. உபமானத்தில்வந்த சேணீங்குபுள் என்ற குறிப்பால் இறந்தவுயிர் மீண்டும் தானிருந்தகுடும்பத்தை நினைத்துக்கொண்டு அங்கேவந்து பிறக்கும் என்பது நியதியற்றது என்பதும் கிடைக்கிறது.

கேளாது என்பது சம்மதம்பெறுமல் என்றபொருளில் "கேட்டார்ப்பிணிக்கும்" (குறள் 643) என்பதன் பரிமேலழகருரையிலும், 'என்னிடம் கேளாமல் போய்விட்டான்' என உலகவழக்கிலும் வருதலை அறிக. ஏகாரங்களும் ஆலும் அசைகள். பின்னதாகிய வாளாது என்பதனை உபமேயத்திலும் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

இறந்தவனுடம்பைமுன்னிட்டுப் புதல்வன்செய்கிறகாடேற்று, சாம்பற்கரைப்பு முதலியவற்றால் இறந்தவன் தூய்மையடைதலாகிய பயன் சவசரீரத்திற்கிருக்க, உபமானத்திற்போல உபமேயத்திலும் பயனின்றி யாக்கை தமர்க்கொழிய என்றல் பொருந்துமோ எனின்? இப்பாட்டியற்றியவர் ஜைனராகையால் அவர் கோட்பாட்டிற்கு இது பொருந்துவதாகும். "தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற், றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை—ஆங்குத்தாம், போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே" எனவும், "நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந்தடக்கிலேன்" எனவும் இந்நூலில் வருதலறிக.

இனி, இருவருரையில் 'பின்வந்த 'வாளாதே' என்பதைச் சேணீங்குபுள் என்பதனோடு கூட்டிச் சும்மா (சொல்லாமலே) நெடுந்

தூரம் நீங்கும் எனவும், 'வாளாதேபோவ' ரென்பதற்குச் 'சொல்லா மலே இறப்பர்' எனவும் பொருளுரைத்தனர். கூட்டிலிருக்கையில் முட்டையிடுதல் முதலான காரியத்தைமுன்னிட்டு இருந்ததுபோலச் சேணீங்குதலினும் இரைதேடி யுயிர்வாழ்தலாகிய காரியமிருக்கச் சும்மாநீங்கிற்றென்றலும், பறவைவிஷயத்திற் சொல்லாமலே நீங் கிற்றென்றலும் பொருந்தாமையறிக. மனிதர் இறக்கையில் தம்மை யடுத்திருப்பவரிடம் சொல்லிக்கொண்டும் அப்பொழுதிருக்கும் நிலைமையால் 'இவன்சாவன்' எனவுணரும்படி முன்னதாக அறி வித்துக்கொண்டும் சாதல் பெரும்பான்மையாக இருக்க, சொல்லா மலே இறப்பர் என்பது எவ்வாறு பொருந்தும்? அன்றியும், வாளாதே என்பதற்குச் சொல்லாமல் என்ற பொருள் இருவழக்கி னும் இருப்பதாகத் தெரியவில்லை. சேக்கை என்பதற்குத் தங்கு மிடம் எனப் பொருள்காட்டியிருப்பது நிரம்பாது; முட்டையிட்டுக் குஞ்சுபொரித்துக் குஞ்சுகள் பறக்க ஆற்றல்பெறுமளவும் பயன்படு மாறு தாய்ப்புள் ஆக்கிக்கொண்ட கூடு என்பதே இங்குப் பொரு ளாம். கேளாதே என்பதற்கு வரலாமா என்று கேளாமலே என்று கூறினும் பொருந்தும்.

மாந்தர்கள் கேளாதேவந்து இல்தோன்றி, புட்போல வாளாது யாக்கை தமர்க்கொழிய இல்நீத்து வாளாதுபோவர் என முடிவு கொள்க.

அதிகாரம்—மெய்ம்மை. பாட்டு—8.

2 ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருவு பலகொள லீங்கு

இ—ள். ஆ வேறு உருவின ஆயினும் - பசுக்கள் (ஒன்றற் கொன்று) வேறுபட்ட நிறமுடையனவாயிருந்தாலும், ஆ பயந்த

பால் - பசுக்கள் தந்த பால்கள், வேறு உருவின அல்ல - வெவ்வேறுநிறமுடையன அல்ல, அவைபோல, அறநெறி - தருமங்களின்பயன், பால்போல் ஒருதன்மைத்து - பால்போல ஒரே தன்மையையுடையது, ஈங்கு - இங்கே (அதாவது அறத்தின் பயனிலே), ஆ உருவுபோல் - பசுக்களின் நிறம்போல, பலகொளல்- பலதன்மைகள் கொள்ளற்க (ஒருதன்மையே கொள்ளல்வேண்டும் என்பது).

பயனிலே பலதன்மை கொள்ளற்க என்றதனால், அறத்திலே பலதன்மை கொள்க என்பது கிடைத்தது. உடன்பாட்டினாலும் எதிர்மறையினாலும் அறப்பயனில் வேற்றுமையின்மை வலியுறுத்தப்பட்டது.

ஒருவன்செய்யும் அறச்செயலுக்குக் காலம், இடம், கருத்தா, நோக்கம் ஆகிய இவைபற்றிப் பயனிலே ஏற்றத்தாழ்வு சொல்வாரும் உளராகையால் அவர்கொள்கையை மறுத்தற்கு இவ்வாறு கூறினார்.

அறநெறி என்பதற்கு அறத்தின்பயன் என்றும் பொருள் இருத்தலை "அறத்தா றிதுவென வேண்டா" என்னும் குறளின் பரிமேலழகருரைநோக்கித் தெளிக. மதங்களின் வேற்றுமையால் அறம், வைதிகதருமம் பௌத்ததருமம் ஜைனதருமம் எனப் பலவகைப்படுமாதலின் அறத்தின பன்மைக்குத் தனித்தன்மையையுடைய இவற்றையே பொருளாகக் கொள்ளவேண்டும். இருவருரையிற் கண்ட தவம், தானம், விரதம், வழிபடுகடவுள்வணக்கம் முதலியன பொதுத்தன்மையுடையனவாதலின் அவை பொருளாகா.

ஒருதன்மையுடைய அறத்தின்கண் மதங்கள்காரணமாக வேற்றுமைகாண்பது, ஒருசாதியான பசுவின்கண் நிறங்களால் வேற்றுமைகாண்பதுபோல்வது என்றபடி. இச்செய்யுளியற்றியவர்

பசுவைப்போற்றும் ஜைனமதத்தினராதலால் பசுவையே உவமையாகக்கொண்டார்போலும்.

இனி இருவருரைகாரர், இப்பாட்டிலுள்ள உபமானோபமேயங்கள் தனித்தனி சாதன சாத்தியங்களாக அமைந்திருத்தலை அறியாராய், அறநெறி என்பதனைப் பிரித்து, 'அறம் பால்போல் ஒருதன்மைத்து' என்றும், நெறி, தானம் தவம் விரதம் வழிபடுகடவுள் வணக்கம் முதலாகப் பலரூபத்திலிருப்பது என்றும், இந்நெறிகளாற் செய்யப்படுவது தருமம் என்றும் உரைகூறினர். இவற்றின் பொருத்தமின்மையை அறிஞர் ஆராய்ந்தறிவர் என்பதுபற்றியும் விரிவஞ்சியும் இவ்வளவில் நிறுத்தலாயிற்று.

அதிகாரம்—நட்பிற்பிழைபொறுத்தல். பாட்டு—2.

3 செறுத்தோ றுடைப்பினும் செம்புனலோ டூடார்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

இ—ள். நீர் நசைஇ வாழ்நர் - (இன்றியமையாத பொருளான) தண்ணீரை விரும்பி வாழ்பவர், செறுத்தோறு - கரையிட்டு அடைக்குந்தோறும், உடைப்பினும் - (தண்ணீரானது கரையை) உடைத்துக்கொண்டு வெளியேசென்றாலும், செம்புனலோடு - கலங்கல்நீரோடு, ஊடார் - கோபித்துக்கொள்ளாமல், மறுத்தும் - மீண்டும், சிறைசெய்வர் - கரைகட்டித்தடுப்பர், (அதுபோல) தாம் வேண்டிக்கொண்டார் - (இன்றியமையாதவரென்றெண்ணித்) தம்மால் விரும்பிக்கொள்ளப்பட்டவர், வெறுப்ப வெறுப்பச்செயினும் - (தாம் விரும்பாதவற்றைப்)பலகாற்செய்தாராயினும், ஊடார் - சினமுங்காட்டாமல், தொடர்பு - அவர்நட்பை, பொறுப்பர் - தாங்கியிருப்பர் (இனி இவருறவு நமக்கு வேண்டாவென்று தள்ளார்) என்றவாறு.

ஊடார் என்பது பின்னும் கூட்டப்பட்டது. செறுத்தலும் உடைத்தலும் பெரும்பாலும் புதுநீர்வரவின்கண் ஆதலால் செம்புனல் என்றார். பொறுத்தல் என்பது தாங்குதல் என்ற பொருளில் "கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத்தாங்கு" எனப் புறநானூற்றுள் (58-ல்) வருதல் காண்க.

உபமேயவாக்கியத்தில், அறிஞர் தோன்றா எழுவாய்; பொறுப்பர் பயனிலை; வேண்டிக்கொண்டார்தொடர்பு செயப்படுபொருள்.

இவர் நமக்கு இன்றியமையாதவர் என்று கொள்ளப்பட்டவர் ஒருகால் இருகால் தாம் விரும்பாததனைச் செய்யின் அதனிமித்தம் அவரைவிலக்கநினைப்பது அறிவுடைமையன்று என்பது கருத்து.

வெறுப்ப வெறுப்ப என்பது, செறுத்தோறு என உபமானத்தில்வந்தமைபோல உபமேயத்திலும் பலகால் என்பதுபடநின்ற வினையெச்ச அடுக்கு. இதனை அறியாராய் அடுக்கைப் பிரித்தோடு, அதில் முன்னதனை எதிர்காலப் பலவின்பால்வினையாலணையும்பெயர் என்று பிழைபட இருவருரையிற் காட்டியிருப்பது வருந்தத்தக்கது.

எதிர்காலவினையாலணையும்பெயராக அவர்கொண்ட அச்சொல்லில் எதிர்காலம் தோன்றவில்லை. சிவாலயங்களில் தேவாரம் ஓதுபவரை ஓதுவார் என்பது காலந்தோன்றாத பெயர்ச்சொல்லாதல்போல வெறுப்ப என்பதும் பெயர்ச்சொல்லேயாமென்பதறிக.

உடைப்பினும் செயினும் என்பவற்றில் உம்மைகள் இழிவு சிறப்பு என்றார். இழிவுமிகுதி அவற்றின்கண் புலப்படவில்லை. செறுத்தோறுடைத்தலும் வெறுப்ப வெறுப்பச் செய்தலுமாகிய இவை ஒருகால் இருகால் நிகழ்வனவன்றி மேலும் மேலும் நிகழ்வனவல்ல. ஆகையால் உம்மைகள் அவ்வச் செயலின் அருமைதோன்ற

நின்றனவாம். மறத்தும் என்பதில், உம்மை இறந்தது தழுவிய எச்சம் என்றார். மீள, மீளவும், மறுபடி, மறுபடியும் என்பன போல்வதோர் இடைச்சொல் அது. அதன்கண் உம்மையைப் பிரித்துப் பொருள்கொள்ள இடமில்லை. ஏனெனில் அது பெயர் வினைகளையடுத்துவரவில்லை.

இனி, தாம்வேண்டித் தொடர்புகொண்டார் என மாற்றிக் கூட்டியும், பொறுப்பர் என்பதற்கு (அவரைப் பிழை) எனச் செயப்படுபொருள் வருவித்தும் உரைகூறினர்.

தாம்வேண்டிக்கொண்டார் - தம்மால்விரும்பிக்கொள்ளப்பட்டவர், அவராவார் நட்பினர் எனப் பொருள்கொள்ளலாமாயிருக்க, செயப்படுபொருளாய்நின்ற தொடர்பு என்பதனைப் பயனின்றி இடையில் நுழைத்துப் பொறுப்பர் என்பதற்கு வேறுசெயப்படு பொருள் வருவித்ததனாற் கண்ட பயனென் ?

அதிகாரம்—மேன்மக்கள், பாட்டு—4.

4 செல்வுழிக் கண்ணொருநாட் காணினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநாள் அடிப்படிற்
கல்வரையும் உண்டாம் நெறி.

இ—ள். நல்வரைநாட - நல்ல மலைகளையுடைய நாட்டிற்குத் தலைவனே ! செல்வுழிக்கண் - நடந்துசெல்லும் வழியில் அல்லது வழிச்செல்கையில், ஒருநாள் - (முன்) ஒருநாள், காணினும் - கண்டிருந்தாலும், சான்றவர் - சான்றோர், தொல்வழிக் கேண்மையின் - (இரண்டாவதுசந்திப்பில்) முன்னேதொட்டு வெகுநாட்பழகின நட்பினர்போல, தோன்றப் புரிந்து-கண்டார்க்குத் தோன்றும்படி (முகமலர்ச்சி, எதிர்கொள்ளுதல், இன்சொற்சொல்லுதல் முதலியன) செய்து, யாப்பர்—(ஒருவரையொருவர்) தழுவிக்கொள்வர்.

(அவ்வாறுசெய்தற்குச் சிலநாட்பழக்கமேனும் வேண்டாவோ வெனின்) சில தினங்கள், அடிப்படின் (நடப்பவருடைய) பாதங்கள் படுமாயின், கல்வரையும் - கல்மலையின்கண்ணும், நெறியுண்டாம் - வழியுண்டாகும்.

கேண்மை - கேண்மையுடையார்க்கு ஆகுபெயர். கேண்மை யுடையார் - நட்பினர்.

காரியமாகிய நெறியுண்டாதற்குக் காரணமாகச்சிலநாள் அடிப் பழக்கத்தை வேண்டுவதான கல்லைப்போன்றதன்று சான்றோர் நட் புணர்ச்சி; உடனுயிர்நீங்குமுரிமைத்தாய உணர்ச்சியொத்த அவர் நட்புக்கு வழிச்செல்கையில் ஒருநாட்சந்தித்த அச்சிறுபழக்கமும் போதுமானது என்பது பாட்டின்கருத்து.

நட்பினர் இருவர் ஒருகாரணத்தாற் பிரிந்து பிறகு சந்திக்கை யில் ஒருவரையொருவர் தழுவிக்கொள்வது பண்டைவழக்கம்.

இனி இருவருரைகாரர், ஒருநாட்கண்ட அம் முதற்சந்திப்பி லேயே தொல்வழிக்கேண்மைதோன்றப் புரிந்தியாப்பர் என்று கொள்ளும்படி உரைகூறினர். அது நிகழக்கூடியதன்று. "நல் லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகும்" (நன்னெறி.) நன்று - பெரிது; என்பதனால், தொடக்கத்தில் நட்புச் சிறிதாக இருந்து நாளுக்குநாள் வளர்வதாகவே கொள்ளக்கிடக்கின்றது. நம் அநு பவமும் அப்படியே. "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும் - வரிசையா, வானூர் மதியம்போல் வைக லும் தேயுமே, தானே சிறியார் தொடர்பு"; "கருத்தறிந்து கற் றுணர்ந்தார் கேண்மை எஞ்ஞான்றும், குருத்திற் கரும்புதின் றற்றே - குருத்திற், கெதிர்செலத் தின்ற தகைத்தரோ என்றும், மதுரமிலாளர் தொடர்பு" என்னும் இந்நூற்செய்யுட்களும் இங்கு நோக்கத்தகும்.

'கல்' என வேண்டாதுகூறினர் என்றார் இருவர். மண்மலையை விலக்கற்கு அவ்வாறு கூறியிருப்பது வேண்டுவதே. செல்வுழிக் கண்-போகிறவிடத்திலே என்றார்; பொருள் தெளிவாக விளங்கவில்லை. காணினும், கல்வரையும் இவற்றின்கண் உம்மைகள் இழிவு சிறப்பு என்றார். இது சரியன்று. சான்றோர் நட்புக்குச் செல்வுழிக்கண் ஒருநாட்காட்சியும் போதுமானதென்று பொருள்படுதலாலும், வன்மைக்குப் பேர்பெற்ற கல்லும் தேயும் எனப் பொருள்படுதலாலும் உம்மைகள் சிறப்புணர்த்துவனவாம்.

கல்வரையும் உண்டாம் நெறியென்பது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம் என்றார் இருவர். இது தவறு. ஏனெனின் முன் வாக்கியப்பொருளுக்கு உபகாரமாய் அதனோடு இது இயைபுபட்டிருக்கப் பிரித்து வேறாகக்கொள்வது பொருந்தாது. இயைபாவது இப்பாட்டின்கண்ணுள்ள வாக்கியங்களிரண்டும் உபமானோபமேயங்களாக இருக்கின்றன. கல்வரைநெறி உபமானம், சான்றோரின் நட்புணர்ச்சி உபமேயம், மறையாமை பொதுத்தன்மை. காட்சியாலுண்டாவது நட்புணர்ச்சி; அடியுரைசுதலால் உண்டாவது நெறி. நட்புணர்ச்சிக்குக் காரணமான காட்சி, செல்வுழிக்கண் ஒருநாட் காணுகிற அளவிற் போதுமானது; ஆனால், நெறிக்கு அது போதாது; சிலநாள் வேண்டும். இவ்வாறு உபமானோபமேயங்களில் ஒப்பும் ஒவ்வாமையும் தோன்றுவதால் வேறுபடவந்தவுவமத்தின் பாற்படுவதாம்.

[தொடரும்.]

௨

ஐயவிஞத்தொடர்

———:(o):———

ஐயவினத்தோடர், ஐயவினவுக்கு விடை என்னும் தலைப்புக்களோடு பண்டு செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள், நூல்கற்பார்க்கும் கற்பிப்பார்க்கும் பதிப்பார்க்கும் பெரிதும் பயன் படுவனவாயுள்ளன. அவற்றூற் சில நூல்களும் உரைகளும் இடையிடையே காணப்பட்ட பிழைகள் ஒழிந்து திருந்தின.

அதுகண்ட யானும் யான் பயின்றநூல்களில் எனக்குண்டாகிய ஐயப்பாடுகளை அவ்வப்போது செந்தமிழில் வெளியிட்டு, அவற்றுக்கு நல்லறிவாளர் இறுக்கும் விடைவிளக்கங்களால் என்னுடைய ஐயங்களகளையகற்றி நல்லறிவுபெறவிழைந்து, முதலில் அறிவாற் சிவமேயாய மணிவாசகப்பெருமான் அருளிய திருக்கோவையார்க்குச் சீர்சாலறிவிற் பேராசிரியர்தந்த நந்தாவுரையுள் தோன்றிய ஐயங்களை இங்கே குறிக்கின்றேன். அவற்றுக்கு ஏற்ற விடைபிறுத்து யானும் என்னனைய மாணவர் பிறரும் தெளிவுபெற அருளுமாறு தண்டமிழ்ச்சான்றோர்களைத் தலைதாழ்த்து வணங்கி வேண்டுகின்றேன். மாணவர் பிறரும், தாந்தாம் பயிலுநூல்களில் தத்தமக்கு உண்டாகிய ஐயங்களை இவ்வாறே செந்தமிழில் வெளியிட்டுச் சான்றோர் விடைவிளக்கங்களால் தெளிவுபெறமுயல்வார்களாக.

இங்ஙனம்,

ஒரு மாணவன்.

விஞ—1.

'போதோவிசும்போ' என்னும் முதலினைப்புடைய 2-ஆம் பாட்டின் விசேடவுரையினுள்,

> "யமன் றூதும், அனங்கன் றுணையும், மடமயிலும்
> ஐயநிலையுவமைக்க ணுவமையாய்நின்றன"

என்று ஒரு தொடர் காணப்படுகிறது? அதிலுள்ளபடி உவமைக்கணுவமையாய்நின்றவாறென்னை?

வினு—2.

'அகல்கின்ற' என்று தொடங்கும் 4-ஆம் பாட்டுரையிறுதியில்,

"இது நலம்பாராட்டல்"

என்று குறித்தது எதுகருதி? அது அச்செய்யுளின் தலைப்பாகிய நயப்பு என்பதனேடியையுமாறென்னை?

வினு—3.

'அணியுமமிழ்தும்' என்னும் முதற்குறிப்புடைய 5-ஆம் பாட்டுக்கு உட்கோள் என்று தலைப்பிட்டிருக்கவும், விசேடவுரையினிடையே 'இஃதுட்கோள்' என்று மீட்டும் குறித்தது எதுபற்றி? அதனுற் பெற்ற பொருளென்னை?

வினு—4.

'காகத்திருகண்ணிற்கு' என்று தொடங்கும் 71-ஆம் பாசுரத்தின்கீழ்க் கொளுவின்முதலடி,

'அயில்வேற்கண்ணியோ டாடவன் றனக் குயிரொன்றெனு'

என்று காணப்படுகிறதே? கொளுவெல்லாம் பெரும்பாலும் செய்யுணடையுடையனவாகக்காணப்பட மேற்குறித்த அடிமட்டும் செய்யுணடைசிதைந்துகாணப்படுவது பொருந்துமா?

வினு—5.

'தாதேய்மலர்க்குஞ்சி' என்று தொடங்கும் 82-ஆம் பாடலின் விசேடவுரையுள் "முகம்புகுகின்றுளாதலின் பின்னும் 'வச்திழையே' என்றுள்" என்ற உரைத்தொடரின்பின்,

"சேயென்புழி எண்ணேகாரந் தொக்குநின்றது; என்னை? மேலே 'புரிசேர்சடையோன் புதல்வன்கொல் பூங்கணைவேள் கொல்' என வருதலான். யாதேயென்னுமேகாரம் வினு. மாதே வச்திழையே என்புழி ஏகாரம் விளியுருபு"

என்று சிலவரிகள் காணப்படுகின்றனவே. அவற்றுள் முன்னுள்ள 'சேயென்புழி எண்ணேகாரம் தொக்குநின்றது' என்பதைப் பின் காட்டிய எதுவாற் றணியுமாறென்னை? எண்ணேகாரம் என்பது பாட்டிற் குறித்தபகுதிக்குவரைந்த பதவுரையொடு பொருந்துமா? அன்றியும், 'யாதே என்னும் ஏகாரம் வினா. மாதே ஏந்திழையே என்புழி ஏகாரம் விளியுருபு' என்று எளிதின் விளங்கிக்கிடந்த வற்றை மீட்டும் விரித்துவிளக்கியது பேராசிரியருரைநடையொடு பொருந்துமா?

வினா—6.

'உள்ளப்படுவனவுள்ளி' என்றுதொடங்கும் 87-ஆம் பாட்டின் உரைமுடிவில், அப்பாட்டின் கீழ்க்கொளுவுள் 'வருந்தியசொல்லின் வகுத்துரைத்தது' என்னும் இரண்டாம் அடிக்கு விளக்கமாகவுள்ள பகுதியில்,

> "வகுத்துரைத்தது வெளிப்படச்சொல்லவேண்டுஞ் சொற் கேட்குமளவுஞ்சொல்லுஞ்சொல். அஃதாவது நீசொல்லத் தகுங் காதற்றோழியர்க்கு வெளிப்படச்சொல்லென்று புலந்துகூறியது"

என்றுள்ள உரைத்தொடராற்பெற்ற விளக்கம் என்னை?

வினா—7.

'தோலாக்கரிவென்றதற்கும்' என்று தொடங்கும் 110-ஆம் பாட்டின் விசேடவுரைத் தொடக்கத்து,

> "உளவேயென்னுமேகாரம் எதிர்மறை, அஃதென்போல வெனின், 'தூற்றாதே தூரவிடல்'* என்றது, தூற்றுமேன்று பொருள்பட்டவாறுபோல வென்றறிக"

என்று சிலவரிகள் காணப்படுகின்றன. இவற்றுள் காட்டிய நாலடி மேற்கோளில் ஏகாரம் எதிர்மறைப்பொருளுணர்த்துமா? உணர்த்தின் தூற்றும் என்று பொருள்படுமா? தூற்றியென்று பொருள் படுமா? அப்பொருள மேற்குறித்த நாலடிப்பாடலொ டியையுமா றென்னை?

---

* நாலடியார். பொறையுடைமை 5.

விஞ—8.

'நரல்வேய்' என்று தொடங்கும் 119-ஆம் பாட்டின் விசேடவுரையிறுதியில், பாட்டாலும் உரையாலும் தெற்றென விளங்கிக் கிடந்தவற்றையே,

"பரல்வேயறையுறைக்கும் வரல்; வேய்தருவன்; இங்கேநில்லேன்று தலைமகளைத் தோழிகூறி இவ்விடத்தே நில்லேன்றாள்"

என மீட்டும் உரைத்தது எதுகருதி? மேற்குறித்தவற்றுள் தடித்த எழுத்தில் உள்ளவை கூறியதுகூறலாய் வழுவாகாவா.

விஞ—9.

'பொன்னனையான்' என்னும் முதற்குறிப்புடைய 125-ஆம் பாட்டின் விசேடவுரையுள்

"மிடைந்தவென்னும் பெயரெச்சம் மின்னனையானென்று நிலப்பெயர்கொண்டது"

என்று இலக்கணக்குறிப்பு வரையப்பட்டுளது. இதனுள், மின்னனையான் என்பது நிலப்பெயராமாறென்னை?

விஞ—10

'மாடஞ்செய்பொன்னகரும்' என்ற முதனினைப்புடைய 129-ஆம் பாட்டின் விசேடவுரையிறுதியில், அப்பாட்டின் தலைப்பாக உள்ளதனையே மீட்டும் 'வரைவுடம்படாது மிகுத்துக்கூறியது' என்று குறித்தது எதுகருதி?

விஞ—11.

'வழியுமது' என்று தொடங்கும் 135-ஆம் பாட்டின் விசேடவுரைமுடிவில், 'மெய்ப்பாடும் பயனும் அவை' என்பதன்பின்,

"வரைவின்கட் டலைமகனை யொற்றுமைகொளுவுதலுமாம்"

என்றுள்ளவாக்கியம் எதைவிளக்க எழுந்தது? விளங்குமாறென்னை?

[தொடரும்.]

உ

மதிப்புரை

திருவாசகம் — நீத்தல்விண்ணப்பம் = கதிர்மணிவிளக்கம் என்னும் பேருரையுடன்:— உரையாசிரியர்: உயர்திரு. மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள். விலை ரூபா இரண்டேமுக்கால். கிடைக்குமிடம்: செட்டிநாடு அச்சகம், காரைக்குடி.

வடமொழிமறைகளுள் நெஞ்சையுருக்கும் இசைத்திறம் வாய்ந்த சாமவேதம்போலச் சைவநன்மக்கள்போற்றும் தமிழ் மறைகளுள்ளே இசைத்திறமுதலியவற்றால் நெஞ்சையுருக்குஞ் சிறப்புவாய்ந்துதிகழ்வது திருவாசகம். இதன்கண் அமைந்த சீரிய பொருள்வகைகள் சிறந்த தமிழ்நூற்புலமையுடன் உயர்ந்த சைவ சமயநூற்புலமையும் முறையானெய்திய கூர்த்தமதியினர்க்கன்றி மற்றையார்க்குப் புலனாகா. எனினும், படிப்போர்க்கு அவரவர் தகுதிக்கேற்பப் பொருளும் இன்பமும் புகட்டி மகிழ்ச்சிவிளைப்பது இதன் பண்பு.

இதன் உறுப்புக்களுள் திருச்சதகத்துக்குச் சில ஆண்டுகளுக்குமுன் நாவலர்புகலும் நல்லுரைகண்டு வெளியிட்டுதவிய மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் இதுபொழுது நீத்தல்விண்ணப்பத்துக்கும் போற்றற்குரிய புத்துரை கண்டு வெளியிட்டுள்ளார்கள்.

நீத்தல்விண்ணப்பம் என்பது, பேரின்பத்தையடைய விரும்பிய மணிவாசகப்பெருந்தகை, அதற்குத் தடையாகவுள்ள தம் ஊனுடலை நீக்கும்வண்ணம் திருவுத்தரகோசமங்கையிறைவனிடம் செய்துகொண்ட வேண்டுகோள் என்று பொருள்படும். இது, அந்தாதித்தொடையாயமைந்த 50-திருப்பாசுரங்களையுடையது. இதன் மாண்பொருள்வகைகளை மக்களெல்லாரும் தெரிந்தின்புறும்வண்ணம் செட்டியாரவர்கள் தந்த விரிவுரை கதிர்மணிவிளக்கம் எனப்படும்.

கதிர்மணிவிளக்கவுரைநடை படிப்போர் உளஞ்சலியாது மேலும் படிக்க விழைபான்மையது; இலக்கணக்குறிப்புக்கள் கலக்க மறுப்பன; பதசாரங்கள் இதமே தருவன; சமயமுடிவுகள் தடுமாறு தன; பொருள்விளக்கங்கள் மருளகல்விப்பன. ஆதலால் இவ்வுரை நீத்தல்விண்ணப்பத்துக்கு இதற்குமுன் எழுந்தவுரைகளினும் சிறந்துவிளங்குதல் ஒருதலை.

இவ்வரியபெரியவுரையினை யெழுதியுதவிய செட்டியாரவர்களும் இதனை அச்சிட்டு வெளியிடுதற்குப் பொருளுதவிசெய்தோரும் நன்றுசெய்தோராவர். இவர்க்கு நீண்டஆயுளும் நிறைந்தசெல்வமும் தந்து இவ்வாறே திருவாசகமுழுதுக்கும் விரிவுரைவெளிவரச் சிற்றம்பலவர் திருவருள்புரிக.

தமிழிசைச்சங்கத்தார் வெளியிட்ட 1949-1950ஆம் ஆண்டுத் தமிழிசைவிழாமலரும், தேவாரப் பண்ணுராய்ச்சிக்கூட்ட அறிக்கையும்:— இவற்றுள், விழாமலரில் தமிழிசைச்சங்கத்தின் ஏழாம் ஆண்டுநிகழ்ச்சிகள் விரிக்கப்பட்டுள்ளன; இசையும் பரதமும் பற்றிப் பேரறிஞர்சிலர் உதவிய கட்டுரைகளும், உயர்திரு கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையவர்களியற்றிய சுரவகுப்போடுகூடிய இசைப்பாட்டும் இசையரங்கு நிகழ்ச்சிமுறையும் காணப்படுகின்றன. அறிக்கையுள் 24—12—49 முதல் 27—12—49 வரை சென்னை மெமோரியல் மன்றத்தில் நிகழ்ந்த தேவாரப் பண்ணுராய்ச்சிக்கூட்டத்தைத் தொடங்கிவைத்தவரும் கூட்டத்தலைவரும் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் முடிவுரைகளும் தேவாரப்பண்களில் 12 பண்களுக்குரிய ராகங்களைப்பற்றி அறிஞர்கருத்துக்களும் முடிவும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. அறிக்கை, பண்ணுராய்ச்சிக்கூட்டத்திற் கலந்துகொண்ட அறிஞர்கருத்துக்களேயன்றி அதிற் கலந்துகொள்ளமுடியாத அறிஞர்கருத்துக்களும் இடம்பெறுதற்குரிய முறையிற் பதிக்கப்பட்டிருப்பது கிடைக்கக்கூடிய கருத்துக்களையெல்லாம் பெற்று முடிவுகாணவிழையும் நன்னோக்கத்தைப் புலப்படுத்துகிறது. தமிழிசைச்சங்கத்தார் பல துறையிலும் செய்துவரும் முயற்சிகள் போற்றத்தக்கன. இவற்றின் பிரதிகள் வேண்டுவோர் சென்னை ஜார்ஜ்டவுண் சிங்கண்ணநாயக்கன்தெருவில் கதவிலக்கம் 8/9 உள்ள தமிழிசைச்சங்கக் காரியாலயத்திற் பெறலாம்.

திருவள்ளுவர் ஒருதுறைக்கோவை:— இயற்றியவர் : முன்னைப் பாலபாடசாலைப் பரிசோதகர் திராவிடக்கவிமணி திரு. வே. முத்து ஸாமிஐயரவர்கள் M.A., L.T. ஆவர். விலை: அணா 10. வேண்டுவோர் திரு. வே. முத்துஸாமிஐயரவர்கள் M.A., L. T., அரங்கநாதபுரம், திருக்காட்டுப்பள்ளிப்போஸ்டு, தஞ்சைஜில்லா என்ற விலாசத்திற் பெறலாம்.

திருவள்ளுவர் ஒருதுறைக்கோவையென்பது திருவள்ளுவரைப் பாட்டுடைத்தலைவராகக்கொண்டு நாணிக்கண்புதைத்தல் என்னும் ஒரு கிளவியே நுவல்பொருளாக 133 கட்டளைக்கலித்துறைகளால் இயற்றப்பட்டதொரு பிரபந்தமாகும். இதில் பாடல்தோறும் முன்னிரண்டடிகளால் முறையே திருக்குறளிலுள்ள அதிகாரப்பெயர்களும் ஒவ்வோரதிகாரத்துள்ளும் சிறந்ததொரு குறட்கருத்துஞ் சுட்டிப் பாட்டுடைத்தலைவராகிய திருவள்ளுவர் பெருமை விளக்கப்படுகிறது. பின்னிரண்டடிகளால் நுவல்பொருளாகிய நாணிக்கண்புதைத்தல் பேசப்படுகிறது. இதனுட் காணப்படும் சொல்லும் பொருளும் தூயன. கற்பனைகள் செப்பமிக்கன. செய்யுணடை தெளிவுவாய்ந்தது. சுவைகள் பலவும் நவையிலாதன.

இவ்வாறு நூற்குரிய நலமனைத்துங்கொண்டு நிலவும் இது, தன்னையாக்கித்தந்த ஐயரவர்களுடைய மனமாண்பும் பலகலையறிவும் தமிழ்நூற்றேர்ச்சியும் ஒழுக்கமேம்பாடும் கவியியற்றுமாற்றலும் முதலியவற்றையெல்லாம் நன்குவிளக்கும் கட்டளையாகத் திகழ்கிறது. நாணிக்கண்புதைத்தல் என்னும் துறையொன்றனையே பலபாடல்களால்விளக்கும் நூல்களிற் சிறந்தவற்றுள் ஒன்றாகவும் இலங்குகிறது.

ஆங்கிலப்புலமையொடு பாங்குற அமைந்த தமிழறிவும் படைத்துத் தம்புகழ்தழைப் பல தமிழ்ப்பிரபந்தங்களை இயற்றிவெளியிட்டுவரும் ஐயரவர்கள் மேலும் இன்னோரன்ன நூல்களையியற்றித்தந்து தமிழைவளர்த்து நெடிதுவாழ இறைவன் அருள்புரிக.

புலவர் உலகம்:—கவிராஜபண்டிதர் ஜேகவீரபாண்டியனாரைத் தமிழுலகம் நன்கறியும். ஒன்பது ஆண்டுகளாக மாதந்தோறும் பாண்டியனார் வெளியிட்டுவரும் தமிழ்ப்பத்திரிகையே புலவர்உலகம் என்பது. இதன் பத்தாந்தொகுதியின் முதற்பகுதி நமது பார்வைக்கு வந்தது. அதில் கம்பன்கலைநிலையென்ற தலைப்பில் இராமன் என்ற பொருள்பற்றியெழுதிவரும் கட்டுரையின் தொடர்ச்சியாய் இராமனிடம் விபீடணன் அடைக்கலம்புகுதலும், அவனை யேற்றுக் கொள்வது குறித்து இராமன் தன் மந்திரச்சுற்றத்தொடு சூழ்தலும் அம் மந்திரச்சுற்றத்தாருரைமுடிவில் அநுமன் தன் கருத்துரைத்தலும் ஆகிய செய்திகள் இராமாவதாரச்செய்யுள்களாலும் பிறநூன்மேற்கோள்களாலும் நன்குவிளக்கப்பட்டுள்ளன. படிப்பார்க்குப் பலவகையறிவும் ஒருங்கு நல்கும் இப்பத்திரிகை நீடுநிலவுக. இதன் வருடச்சந்தா ரூ. 5—12—0 வேண்டுவோர் மதுரை மேலமாசிவீதியில் கதவிலக்கம் 127 உள்ள திருவள்ளுவர்நிலயத்திற் பெறலாம்.

தமிழ்ச்சாஸனங்கள் [ஆராய்ச்சிக்குறிப்புரைகளுடன்]:—குறிப்புரையாசிரியர் திரு. வ. தங்கையாநாடாரவர்கள். விலைரூபா மூன்று. வேண்டுவோர் பாளையங்கோட்டை ஸெயின்ட்ஜான்ஸ் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியராகிய வித்துவான். வ. தங்கையாநாடாரவர்களிடம் பெறலாம்.

சென்னைப் பல்கலைக்கழகம் பீ. ஏ. பட்டப்பரீக்ஷைக்கும் வித்துவான்பரீக்ஷைக்கும் பாடமாக வெளியிட்ட இருபது சாஸனங்கள் விளக்கக்குறிப்புக்களுடன் அமைந்துள்ள இதற்கு உயர்திரு. பண்டித வீ. வேதமாணிக்கநாடாரவர்கள் வரைந்துதவிய முன்னுரை அணிகலமாக விளங்குகிறது. பரீக்ஷைக்குப் படிப்பார்க்கு உதவும் நோக்குடன் இதனைவெளியிட்ட ஆசிரியர் முயற்சி பாராட்டத்தக்கது. இதனுள் காணப்படும் பிழைகள் திருந்திப் படிப்பார்க்கு முழுப்பயனும் விளையும்படி இதனை அச்சிட்டுதவுவது ஆசிரியர்கடனாகும்.

335 மெய்யழகுஞ் செய்ய விழியழகுஞ் சங்காழிக்
கையழகுங் கண்டு கலங்கினாள்—ஐயனெங்கோன்

336 தண்ணந் துழாய்மவுலித் தாமோ தரனுமிவள்
எண்ணந் துழாவு மியல்கண்டு—கண்ணருளாற்

337 பார்த்து நகைத்தகன்றான் பஞ்சபா ணங்கள்வந்து
போர்த்துடல மெல்லாம் புழைபட்டா ... த்

338 தொடைமடக்கி மாரனுந்தேர்த் தூளியொடும் போனான்
மடவாலைச் சேர்ந்தணைத்து மாதர்—கொடுபோகிச்

339 சீத மலரணையிற் சேர்த்திப் பனிநீர்சவ்
வாது புழுகுழலை மார்பணிந்தார்—சீதரன்பேர்

340 ஓரா யிரமு முரைத்தா ளுளந்தெளிவுற்
றாராத மையல்சிறி தாறினாள்—சீரார்

335–36 மெய்-திருமேனி. விழி - கண். ஆழி - சக்கரம். ஐயனும் எம் கோனும் ஆகிய தாமோதரனும் என்க. தண் அம் துழாய் - குளிர்ந்த அழகிய துழாய்மாலை. மவுலி - கிரீடம். இவள் என்றது அரிவையை. இவள் எண்ணம் துழாவும் இயல் கண்டு. எண்ணம் - நினைவு. துழாவு மியல் - ஆராயும் தன்மை. அருட்கண்ணால் என மாற்றிக்கூட்டுக.

337 பஞ்சபாணங்கள் வந்து போர்த்து உடலமெல்லாம் புழைபட்டாள் என்க. போர்த்து - போர்க்க=மறைத்தலால். உடலம் - மெய். புழை - துவாரம்.

338—40 மாரனும் தொடைமடக்கித் தேர்த்தூளியோடும் போனான் எனக் கூட்டுக. மாரன் - மன்மதன். தொடைமடக்கி - (அம்பு) தொடுத்தலை மாற்றி. தேர்த்தூளி - சிறுபுலியூர்மாலின் தேர்செல்லுதலால் எழுந்த தூசி. மாதர் மடவாலைச்சேர்ந்து அணைத்துக்கொடுபோகி என்க. மாதர் - செவிலிமுதலியோர். மடவால் - பெண்; இங்கே அரிவை. சீதம் - குளிர்ச்சி. மலரணை - பூப்படுக்கை. சேர்த்தி - படுக்கவைத்து. புழுகு - புனுகு. மையல் - காமமயக்கம்.

329–340 பிறைநுதலாள் (329) குறிபார்க்கும் எல்லைக்கண், திருமால் (330), திருத்தேருடு மாமேற்கொண்டுவரக் கூடலொழிந்து போய்க் கும்பிட்டாள் (333) ஆகிச் சோர வார (334) அழகும் அழகும் அழகும் கண்டு

தெரிவை.

341 தெரிவை யொருத்தி சிலைவேட னைத்தன்
புருவநெறிப் பானிறுத்தும் பூவை—விரதமுறும்

342 தாபதர்க டம்மைத் தவமழிக்க வந்தவிந்த்ர
சாபநுதற் காரளகத் தையலாள்—கோபமுறப்

343 பூட்டாத வில்லும் பொரும்போர்க்குச் சாணைவைத்துத்
தீட்டாத வம்புஞ் செழும்பாகு—கூட்டாது

344 தித்தித் தமுதூறுஞ் சேதாம்ப லுங்குமிழும்
பத்தித் தளவும் பதிந்திருபால்—ஒத்தகுழை

345 வள்ளையும் பூத்த மதிமுகத்தாண் மாரனூர்
கிள்ளையெனு மின்சொற் கிளிமொழியாள்—கொள்ளைமறை

கலங்கினுள் (ஆக), ஐயன் எங்கோன் (335) ஆகிய தாமோதரனும் இவள் இயல்கண்டு (336) அருட்கண்ணுற்பார்த்து நகைத்து அகன்றுனுக (337), மாதர் மடவரலை.அணைத்துக்கொடுபோகி (338) சேர்த்தி, அணிந்தார் (339), உரைத்தார் (340 ஆக அவள்) மையல் சிறிது ஆறினுள் என முடிக்க,

341 தெரிவை - எழுவகைப்பருவமகளிருள் 26-க்குமேல் 5 வயது நிரம்பிய (அதாவது 31 வயதுள்ள) பெண். சிலை - வில். வேள் தனை - மன்மதனை; தன் சாரியை. நெறிப்பால் - நெளித்தலால். மன்மதனையும் தன் குறிப்பின்படி அடங்கியொழுகச்செய்பவள் என்றபடி.

342 தாபதர்கள் தம்மை-தவஞ்செய்வோரை; தம் சாரியை. இந்த்ர சாபம் - இந்திரவில்=வானவில். இந்த்ரசாபநுதல் - வானவிற்போன்ற புருவம். கார் அளகம் - மேகம்போன்ற கூந்தல். இந்த்ரசாபநுதல் காரளகம் என்பன தொகையுவமை.

343—45 பூட்டாத - வளைத்து நாணேறிடப்படாத. பூட்டாதவில் என்றது புருவத்தை. தீட்டாத அம்பென்றது கண்களை. சேதாம்பல் - செவ்வாம்பல். பாகுகூட்டாது தித்தித்து அமுதூறும் சேதாம்பல் என்றது அதரத்தை; விபாவனுலங்காரம். குமிழ் - குமிழம்பூ; என்றது நாசியை. பத்தி - வரிசையான. தளவு - முல்லையரும்பு; என்றது பற்களை. பதிந்து - பொருந்தி. இருபால் - இரண்டுபக்கமும், குழை - குண்டலங்களோடு கூடிய. வள்ளை - வள்ளைக்கொடி; என்றது காதுகளை. பூத்த - உண்டா

346 தேங்கிப் பணைத்த திருவாய் மொழிப்பொருள்போல்
ஓங்கிப் பெருத்தமுலை யொண்ணுதலாள்—ஆங்கவனைப்

347 போற்றாத மாந்தர் புகழும் திருவுமெனத்
தோற்றாது தேய்ந்து துவளிடையாள்—மாற்றிலாக்

348 கொத்தாணிச் செம்பொன் குயின்றகலை சூழ்ந்துமதன்
அத்தாணி யாயகன்ற வல்குலாள்—பொத்தகம்போற்

349 சேர்ந்து கமலச் செழும்போதை வென்றுசிவப்
பார்ந்தழகு கொண்ட வடியினாள்—சேர்ந்தன்னக்

350 கற்கநடை கற்பிக்குங் காட்சியாள் ... ...
... ... சாயல் வனப்பினாள்—சொற்கற்கும்

யிருக்கிற. வில்லும் அம்பும் சேதாம்பலும் குமிழும் தளவும் பதித்து வள்ளையும் பூத்த மதி என்றது இல்பொருளுவமம். மாரன் - மன்மதன். ஊர்வறிச் செலுத்துகின்ற. கிள்ளை - கிளி. கிளியை மன்மதனுக்கு வாகனமாகக் கூறுவது கவிமரபு. கொள்ளை - மிகுதியான. மறை - மறைப்பொருள்.

346 ஒண்ணுதலாள் என்பது நுதல் (புருவம்) என்னும் உறுப்படியாகவந்த பெயராகாது வாளா பெயராய் அவள் எனச் சுட்டிநின்றது; 342-ஆம் கண்ணியில் நுதல் கூறப்பட்டது காண்க. ஆங்கு அவனை - அத்திருவாய்மொழியிற் பேசப்பட்ட (அகாரவாச்யனை) திருமாலை.

347—48 மாற்றிலா - ஒப்பில்லாத. கொத்து - தொகுதியான. ஆணிச்செம்பொன் - செவ்விய மாற்றுயர்ந்த பொன்னால். குயின்ற - செய்யப்பட்ட. கலை - மேகலை. மதன் அத்தாணி - மன்மதன் கொலுவிருக்கை. அல்குல் - நிதம்பம்=பின்தட்டு. பொத்தகம் - புத்தகம்.

349—50 கமலம் - தாமரை. போது - பூ. புறவடிக்குப் புத்தகத்தை உவமைகூறுதல் மரபாதலிற் பொத்தகம்போற் சேர்ந்தென்றார். சேர்ந்து - இட்டிவந்து. அன்னம் சேர்ந்துகற்க நடைகற்பிக்குங் காட்சியாள் எனக் கூட்டுக.

341—350 தெரிவையின் கேசாதிபாதவருணனை. பூவை (341), தையலாள் (342), முகத்தாள், மொழியாள் (345), முலையாள் (346), இடையாள் (347), அல்குலாள் (348), அடியினாள் (349), காட்சியாள், வனப்பினாள் (350), (ஆகிய) தெரிவையொருத்தி (340) என இயைக்க.

351 கிள்ளை தனைத்தழுவிக் கீரமு ... ...
வள்ளமிசை யூட்டி வளர்த்தேனே—தெள்ளியசொ

352 லஞ்சுகமே ... ... யானனுதி
னஞ்சுகமே வாழ வருளாயோ—பஞ்சவனத்

353 தத்தையே யின்றெனக்குத் தத்தையே காட்டுமனத்
தத்தையே நீக்கு ... ... தத்தையே

354 விண்ணப்பஞ் செய்து விறல்வே ளெனதுயிரை
யுண்ணப்பஞ் செய்வ தொழியாயோ—பெண்ணொப்பார்

355 தீயின்றி வேவாரு முண்டோ சிறிதுடம்பில்
நோயின்றி யாற்ருத நோவுமுண்டோ—காய்கின்ற

356 தண்மதியு முண்டாமோ தாயும் பகையாமோ
பெண்மதியுங் குன்றிப் பிழையாமோ—வண்மைதிகழ்

357 ஆயன் சிறுபுலியூ ரண்ணலரு மாகடல்செவ்
வாயன் திருமா மகன்மருவும்—தூய

358 திருமார்பில் வண்டுழாய்த் தேமாலை வாங்கித்
தருமாறு செல்லென்று சாற்றப்—பெருமானும்

---

351 கிள்ளை - கிளி. கீரம் - பால். வள்ளம் - கிண்ணம். தெள்ளிய - திருந்திய.

352—53 அம் சுகமே - அழகிய கிளியே! யான் அநுதினம் சுகமே வாழ எனப் பிரிக்க. அநுதினம் - தினந்தோறும். பஞ்சவ(ன்)னத் தத்தையே - பஞ்சவர்ணக்கிளியே. தத்தையே - ஆபத்தையே. அசத்தத்தை - பொல்லாங்கை.

354 விண்ணப்பஞ்செய்து - சொல்லி. உயிரை உண் அப்பு அஞ்சு எய்வது ஒழியாயோ! எனப் பிரிக்க. அப்பு - அம்பு. அம்பு அஞ்சு - பஞ்ச பாணங்கள்.

355—56 காய்கின்ற - சுடுகின்ற. மதி - சந்திரன். பெண்மதி - பெண்ணறிவு. வண்மை - கொடை.

351—58 தெரிவை தன் காதல்நோய்தீரச் சிறுபுலியூர்த்திருமால் பால் தூதுசென்று அவன்மார்பிற் றுழாய்மாலை வாங்கிவருமாறு தான் வளர்த்த கிளியை விடுஞ் செய்தி கூறப்படுகிறது. தெரிவை கிள்ளைதனைத் தழுவி (351), 'சுகமே! பஞ்சவன்னத் தத்தையே! அருளாயோ! (352),

359 வீதியின்வா யாழ்வார்கள் வேத முழக்கதிரக்
கோதில் கருடக்கொடியோங்கப்—போதுதலும்

360 சென்று பணிந்து திசையளந்த சேவடியும்
பொன்றிகழுஞ் சோதிப் புனைதுகிலும்—குன்றுநிகர்

361 தோளுஞ் சிலையுஞ் சுடராழி யுஞ்சங்கும்
வாளுங் கதையு மதிமுகமும் —மூளும்

362 குழையுங் கருணை கொழித் ... ...
விழையுங் கமல விழியும்—பழையமறை

363 தேடுந் திருமுடியுஞ் சிந்தையுறவேயமைத்து
நீடும் பொழுதெல்லா நின்றயர்ந்தாள்—கோடும்

ஒழியாயோ; (854) உண்டோ? (355), ஆமோ? (356) சிறுபுலியூர் அருமா கடல் திருமார்பில் துழாய்மாலை வாங்கித்தருமாறு செல்' என்று சாற்ற (358) என இயைக்க.

358—59 பெருமானும் - சிறுபுலியூர்த்திருமாலும். வீதியின்வாய் - தெருவில். போதுதலும் - எழுந்தருளலும்.

360—63 சிறுபுலியூர்த்திருமால் பாதாதிகேசவருணனை.

360 பணிந்து - வணங்கி. திசை இங்கே உலகம். திகழும் - விளங்குகின்ற. சோதி - ஒளிபொருந்திய. புனை - அணிந்த. திகழுஞ் சோதிப் பொன் துகில், புனைதுகில் எனக் கூட்டுக. பொன்துகில் - பொன்னுடை குன்று நிகர் - மலைபோன்ற.

361—63 சிலை - வில்=சார்ங்கம். சுடர் - ஒளிவிடுகின்ற. ஆழி - சக்கரம். கதை - தண்டாயுதம். சிலையும்......கதையும் என்று பஞ்சாயுதங்களும் கூறப்பட்டன. மூளும் - வளர்ந்த. குழையும் - காதுகளும். விழையும் - விரும்புகின்ற. கமலம் - தாமரை. விழி - கண். சிந்தையுற - மனத்துப் பொருந்த. அயர்ந்தாள் - சோர்ந்தாள். கோடும் - வளைந்த.

358-63 (தெரிவை தன்கிளியை நோக்கித்)தூதுசெல் என்று சாற்ற, (அவ்வளவிற்) சிறுபுலியூர்த்திருமால் போதுதலும் (359), (அவள்) சென்று பணிந்து, சேவடியும் துகிலும் (360) தோளும் சிலையும் ஆழியும் சங்கும் வாளும் கதையும் முகமும்(361), குழையும் விழியும் (362), முடியும் சிந்தையுற அமைத்துநின்று அயர்ந்தாள் (363) என முடிக்க.

364 சிலைவளைத்து மாரவேள் செய்வதெல்லாஞ் செய்து
கொலைவிளைத்து நாண்மடக்கிக் கொண்டான்—தலைவளைத்த

365 பூங்கரும்பன் வாளிதைத்துப் புண்பட்ட மாதினுயிர்ப்
பாங்கியருந் தாயும் பரிந்தணைத்து—நீங்குதலும்

366 விண்ணோர் பெருமானவ் வீதிகடந் தேகியிந்த
மண்ணோர் வணங்க மறுகணைந்தான்—பெண்ணரசாம்

பேரிளம்பெண்

367 ஆங்கொருத்தி பேரிளம் ... ... னாரமுதம்
தீங்கரும்பும் போலினிய தேமொழியாள்—பாங்காய

368 வண்மையுங் கல்வியும் வாய்மையும் பேரழகும்
பெண்மையுமொப் பில்லாத பெற்றியாள்—விண்மழைகூர்

369 நள்ளிருளுங் காரகிலு நாவியுங் காவியுங்கொண்
டள்ளி முடிக்கு மளகத்தாள்—பிள்ளை

370 மதிக்கு நிகர்நுதலாள் வார்குழையைப் பாய்ந்து
மிதிக்கு மிருகூர் விழியாள்—பதிக்குமணி

371 முத்த நிரையை முகிழ்விரிசே தாம்பலிடை
வைத்தனைய செம்பவள வாயினாள்—ஒத்துவிரி

364—65 சிலை - வில். மாரவேள் - மன்மதன். பூங்கரும்பன் - பூவோடு கூடிய கரும்புவில்லையுடையான் = மன்மதன்.

366 விண்ணோர்பெருமான் என்றது சிறுபுலியூர்த்திருமாலை. கடந் தேகி - கடந்துசென்று. மறுகு - (பிறிதொரு) தெருவை.

367—75 பேரிளம்பெண்ணின் கேசாதிபாதவருணனை.

368—70 வாய்மை - மெய். விண்மழை - ஆகாயத்திலுள்ள மேகமும். கூர் - மிக்க. நள்ளிருளும் - செறிந்த இருளும். காரகிலும் - கரிய அகிற்புகையும். நாவி - கத்தூரி. காவி - நீலமலர். அளகம் - கூந்தல். பிள்ளைமதி - பிறைச்சந்திரன். நிகர் - ஒத்த. நுதல் - நெற்றி. வார் குழையை - நீண்ட காதுகளை. பதிக்கும் - பதிக்கப்பட்ட. அணி - அழகிய.

371—72 முத்தநிரை - முத்துவரிசை. முகிழ் - அரும்பு. சேதாம்பலிடை - செவ்விய ஆம்பற்பூவின்கண். வைத்தனைய - வைத்தாற்போன்ற. முத்தநிரை பல்வரிசைக்கும் ஆம்பல் வாய்க்கும் உவமை. ஒத்து விரி - ஒரு

372 காந்தண் மலரனைய கையினள் வண்புழுகு
தோய்ந்த கழைபோலுந் தோளினள்—ஏந்துலகில்

373 எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்தென்னும்—தொல்லுரையாற்

374 றேய்ந்து தனைவணங்குஞ் சிற்றிடையைத் தான்வணங்கிச்
சாய்ந்தழகு கொண்ட தனத்தினள்—பூந்துகில்சூழ்

375 பைவிரியு மல்குற் படத்தினள் பாடகஞ்சேர்
செய்ய கமலமலர்ச் சீறடியாள்—வையமெல்லாம்

376 வேண்டி வணங்கி விலையா வணமெழுதி
ஆண்டாக செய்யு மழகினள்—பூண்ட

377 இரதிக்குங் காமனுக்கு மிந்திரா ணிக்கும்
சாதக் கலைபலவுஞ் சொல்வாள்—பரதத்

378 துவத்தை விளக்குஞ் சுருதித் தமிழ்தேர்
தவத்தை யிழைக்கத் தருவாள்—பவத்துயரம்

தன்மைத்தாய் மலர்ந்த. காந்தள் மலர் கைக்குவமை. வண் புழுகு - சிறந்த புனுகு. தோய்ந்த - அணிந்த. கழை - மூங்கில்.

373—374 பேரிளம்பெண்ணின் தலைசாய்ந்து கீழ்நோக்கிய தனத்தை வருணிக்கப்புக்க கவி, "எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வந் தகைத்து" என்னும் திருக்குறளைச் சொல்லும் பொருளும் தொடையும் முதலிய நயம் சிதையாமல் எடுத்தாண்டு, அக்குறட்பொருளை யறிந்ததுபோலப் பேரிளம்பெண்ணின் தனம் தன்னைவணங்கிய இடையைத் தான் வணங்கி அழகுகொண்டது என்று தற்குறிப்பேற்றமாகக்கூறியது உவகைவிளைப்பது. தொல்லுரை - பழமொழி=குறள். பூந் துகில் சூழ் - பொலிவுடைய பட்டுடைவளைந்த.

375—76 பை - அழகு. பாடகம் - ஒருவகைக் காலணி. செய்ய - சிவந்த. சீறடி - சிறிய அடி. வையம் - உலகம். விலையாவணம் - கிரையபத்திரம்.

377–78 சாதக்கலை - காமநூல். பரதத்துவத்தை விளக்கும் சுருதித் தமிழ் - திருவாய்மொழி. பவத்துயரம் - பிறவித்துன்பம்.

379 நீக்கி ... ... நிலாமணிமே டைத்தவிசு
நோக்கி யடைந்து நுடங்கிடையாள்—தாக்குமணிக்

380 கற்றைக் கவரிசிறு காலசைப்ப வீற்றிருந்து
முற்ற ... ... முழுதுணர்ந்து—தெற்றெனவெம்

381 வாயவனை யல்லது வாழ்த்தாது கையுலகம்
தாயவனை யல்லது தாந்தொழா— பேய்முலைநஞ்

382 சூணாக வுண்டா னுருவோடு பேரல்லாற்
காணாகண் கேளா செவியென்று—நாணாளும்

383 மாறன் பணித்த மறைநான்கும் மங்கையர்கோன்
ஆறங்கங் கூற அருந்தமிழும்—வேறுமுள்ள

---

379 நிலாமணிமேடைத் தவிசு-சந்திரகாந்தக்கல்லாலாகிய திண்ணையிலிட்ட ஆசனத்தை. நுடங்கு - துவளுகின்ற. மணி தாக்கும் - மணிகள் அழுத்திய.

380 கற்றைக்கவரி - தொகுதியான சாமரை. சிறுகால் அசைப்ப - இளங்காற்றை யெழுப்ப. தெற்றென - தெளிவாக.

367—80 அளகத்தாள் (369), நுதலாள், விழியாள் (370), வாயினள் (371), மொழியாள் (367), தோளினள், கையினள் (372), தனத்தினள் (374), இடையாள் (379), அல்குற்படத்தினள், அடியாள் (375), அழகினள் (376), சொல்வாள் (377), தகுவாள் (378), பெற்றியாள் (368) (ஆன) பேரிளம்பெண்ணொருத்தி (367), தவிசுநோக்கியடைந்து (379), வீற்றிருந்து (380) என இயைக்க.

381—82 இங்கே, 'வாயவனை ... ... செவி' என்னும் முதல் திருவந்தாதிப்பாசுரம் (கக) எடுத்தாளப்பட்ட நயம் இன்பம் விளைப்பது. பேய்முலைநஞ்சு ஊணாகவுண்டான் உருவல்லாற் கண் காணா, உண்டான் உருவொடு பேரல்லால் செவி கேளா எனக் கூட்டிப் பொருள்கொள்க. ஊண் - உணவு பின் உரு- திவ்யாத்மகுணங்கள். நாணாளும் - தினந்தோறும்.

383 மாறன் - நம்மாழ்வார். பணித்த - அருளிச்செய்த. மறை நான்கென்றது திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பவற்றை. மங்கையர்கோன் - திருமங்கையாழ்வார். ஆறங்கம் கூறும் அருந்தமிழ் - ஆறங்கமாக இயற்றிய அரிய தமிழ்த்திவ்யப்பிரபந்தங்களாகிய சிறியதிருமடல், பெரியதிருமடல், திருவெழுகூற்றிருக்கை, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், பெரியதிருமொழி என்பவை. வேறும் உள்ள - மற்றும் உள்ள.

384 ஆழ்வார்கள் பாட லருமறை நூ லும்பயின்று
வாழ்வா யிருந்து மகிழ்போதிற்—சூழ்வானத்

385 தும்பரிடை தோன்றி யொளிர்சோதி யோதிமமொன்
றிம்ப ரிடையிறங்கி யெய்துதலும்—கொம்பனையாள்

386 நீயா ரெனவினவ நீண்ட திரைப் பாற்கடலின்
மாயோ னளித்த வரத்தினாற்—காயம்

387 நரைதிரைநோய் மூப்பிறப்பு நண்ணா துடையேன்
கரையிறந்த கல்வியெலாங் கற்றேன்—விரைசெறிந்த

388 தாமரைமே லான்முகனார் தம்முலகு மெவ்வுலகும்
சேம முடன்பயிலுஞ் செய்கையேன்—ஆமவையாற்

389 காலமொரு மூன்றுங் கருதுங் கருவியினான்
மூல முதற்பொருளை முன்னுவேன்—ஞாலமெலாம்

390 பண்டளந்து கொண்ட பரந்தாமன் சேவடியால்
தொண்டளந்த தேவரைநான் சொல்லேனே-ஒண்டொடியாய்

391 என்னு மளவி லிணையடிமேல் வீழ்ந்திறைஞ்சி
அன்ன நடையா ளகங்குழைந்து—நன்னெறிதேர்

380—386 பேரிளம்பெண் வீற்றிருந்து, மறைநான்கும், அருந்தமிழும் (383), மறைநூலும் பயின்று மகிழ்போதில் (384) என முடிக்க. வானத்தும்பரிடை - வானத்தின்மேல். ஓதிமம் - அன்னம். இம்பரிடை - இந் நிலவுலகில். காயம் - உடல்.

387 திரை - தோற்சுருக்கம். கரையிறந்த - எல்லையற்ற. விரை - நறுமணம். செறிந்த - நிரம்பிய.

388 சேமம் - இன்பம். பயிலும் - சஞ்சரிக்கின்ற. ஆம் அவையால் - பொருந்திய வரம் முதலிய அவற்றாலும்.

389 ஒருமூன்றுகாலமும் கருதும் கருவியினால் என இயைத்து, இறந்தகால நிகழ்கால எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் (அறிவாகிய) கருவியினால் எனப் பொருள்கொள்க. மூல முதற்பொருள் - உலகத்தோற்றத்துக்குக் காரணமானவனும் தலைவனும் ஆகிய திருமால். முன்னுவேன் - தியானிப்பேன். ஞாலம் எலாம் - உலகம் முழுவதையும்.

391 இணையடி - இரண்டு கால். இறைஞ்சி - வணங்கி. அன்ன நடையாள் - அன்னநடைபோலும் நடையுடையளாகிய பேரிளம்பெண்.

392 ஓதிமமே யம்மானை யுள்ள படியறிய
வோதிமயல் மாற்றென்று ... ... —நல்லாய்

393 முற்குணத்தான் செய்கை முழுவேத முங்காணு
நற்குணத்தா......னல்ல நமக்கெளிதோ—சிற்குணத்த

394 ரான முனிவ ரயனூர் சி......
வானவருஞ் சொல்லி வடுப்பட்டார்—ஆனாலும்

395 நெய்க்கடலை யோரெறும்பு நின்று பருகுவபோல்
மைக்கடல்வண் ணன்சீர் வளமுரைக்கேன்—எக்குணமும்

385—91 ஓதிமம் ஒன்று எய்துதலும், கொம்பனையாள் (பேரிளம்பெண்) 'நீயார்' என வினவ (386), (ஓதிமம்) தொடியாய் (390), உடையேன், கற்றேன் (387), செய்கையேன் (388), முன்னுவேன்(389), சொல்லேனே (390) என்னும் அளவில் (391) என முடிக்க.

392 ஓதிமமே - அன்னமே. அம்மானை - அழகிய பெரியோனை = திருமாலை. அம்மானை அறிய, உள்ளபடி அறிய என இயைக்க. உள்ளபடி அறிகையாவது அம்மானுடைய சொரூபரூபகுணங்களை அவையவை உள்ளவாறு தெரிதல். ஓதி - சொல்லி. மயல் மாற்று என்று (என்னுடைய) மயக்கத்தைப் போக்குவாயாக என்று; இது பேரிளம்பெண் பேச்சு. இனி, 400-ஆம் கண்ணி முடியத் திருமால்பெருமைசெப்பும் அன்னத்தின்பேச்சு, வேதத்திலும் திருவாய்மொழி முதற்பத்தின் முதற்பதிகத்திலும் பிறஇடங்களிலும் விரித்துக்கூறப்பட்டவற்றின் சுருக்கமாயமைந்து இன்பம்விளைத்தல் காண்க. நல்லாய் - நற்குணமுடையவளே; என்றது பேரிளம்பெண்ணை.

393 முற்குணத்தான்-முன் எண்ணப்படும் சத்துவகுணத்தையுடைய னை திருமாலினுடைய. சிற்குணத்தர் ஆன - ஞானத்தையே பண்பாக வுடையவர்களாகிய.

394 அயனூர் - பிரமன். வானவரும் - தேவர்களும். சொல்லி - திருமால்பெருமை பேசி. வடுப்பட்டார்— (முற்றக்கூறமுடியாதவராய்) வசையுற்றூர்.

395 திருமால்பெருமைக்கு நெய்க்கடலும், அதைக் கூறப்புக்க அன்னத்துக்கு அந்நெய்க்கடலைப் பருகப்புக்க சிற்றெறும்பும் உவமை. ஓர் என்பது சிறுமைதோன்றநின்றது. பருகுவதுபோல் என்பது பருகுவபோல் என்றனது விகாரம். பருகுதல் - குடித்தல். மைக்கடல்வண்ணன் - திருமால். சீர்வளம் - பெருமைமிகுதி.

396 தானாகி யெவ்வுலகுந் தானாகி யெவ்வுயிரும்
தானாகி யொத்துளனுந் தானாகி—நானிலமும்

397 உண்டா னுமிழ்ந்தா னளந்தா னொருகோட்டிற்
கொண்டா னறமனைத்துங் கூறினான்—விண்டுவல்லார்

398 கண்ணுக் குருப்பொல்லார் காதுக்குத் தீப்புகழார்
நண்ணிக் கொடுத்தவர நாசமுள்ளார்—என்னுற்ற

399 தங்கள் படுந்துயரந் தாந்துடைக்க மாட்டாமல்
எங்கள் பிரானை யிரந்துரைப்பார்—செங்கைவளை

400 மின்னே முகுந்தனுக்கும் வேறுமுள்ள தேவருக்கும்
பொன்னே ரிரும்பெனவும் போதாதோ—என்னும்

396—97 நால் நிலம் - முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பன. நானிலமும் என்பதனைப் பின்வரும் வினைகளோடுங்கூட்டி நானிலமும் உண்டான், நானிலமும் உமிழ்ந்தான், நானிலமும் அளந்தான், நானிலமும் ஒரு கோட்டிற் கொண்டான் என முடிக்க. நானிலமும் உண்டது பிரளயகாலத்தில்; உமிழ்ந்தது படைப்புக்காலத்தில்; அளந்தது திரிவிக்கிரமாவதார காலத்தில்; கோட்டிற்கொண்டது வராகாவதாரகாலத்தில்; அறமனைத்துங்கூறியது கிருஷ்ணாவதாரகாலத்தில். விண்டு அல்லார்— (தேவருள்) திருமாலல்லாத பிறர்.

398—99 உரு - வடிவு. பொலார் - பொல்லார் - தீயர் தங்கள் துயர், படும் துயர் என இயைக்க. துடைக்கமாட்டாமல் - போக்கிக்கொள்ள முடியாமல். எங்கள்பிரான் என்றது திருமாலை. இங்கே, "காணிலும் உருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணிலும் வரந்தர மிடுக்கிலாத தேவரை, ஆணமென் றடைந்துவாழும் ஆதர்காள்! எம் ஆதிபால், பேணி நும் பிறப்பெனும் பிணக்கறுக்ககிற்றிரே" (திவ். திருச்சந்தவிருத்தம்—௬௯) என்னும் பாசுரப்பொருளை எடுத்தாண்டது காண்க.

400 மின்னே என்றது பேரிளம்பெண்ணை. முகுந்தன் - திருமால். முகுந்தனுக்குப் பொன்னும் பிறதேவருக்கு இரும்பும் உவமை. இங்கே, 'பொன்னொடிரும்பனையர் நின்னொடுபிறரே' என்ற பழம்பாடற் சொல்லும் பொருளும் தொடர்புற்றமைந்தது காண்க.

391–400 ஓதிமம் 'சொல்லேனே' என்னுமளவில் அன்னநடையாள், இறைஞ்சி (391), 'ஓதிமமே! அம்மானை உள்ளபடி அறியஓதி (என்) மயல் மாற்று' என்று உரைசெய்ய, (அன்னம்), 'நல்லாய்! (392) முற்குணத்தான்

401 பொழுதிற் சிறுபுலியூர்ப் புங்கவன்வண் டாடிக்
கொழுதிக் குடைந்த துழாய்க் கொண்டல்—பழுதற்ற

402 விண்டுதிக்குந் தென்மழிசை வேந்தன் வலமாதல்
கண்டுதிக்கெல் லாந்திரும்பிக் கண்வைத்தோன்-மண்டுதிக்க

403 விண்ணுடர் போற்ற விளங்குந் திருத்தேர்மேற்
கண்ணு யிரமுடையான் கண்ணுற்றான்—தண்ணார்ந்த

404 காவியு நீலமுங் காருங் கருங்குவளை
பூவையுங் காயாவும் போல்வடிவும்—பாவுமறை

செய்கை வேதமும் காணு, நமக்கெளிதோ; (393) வானவரும் சொல்லி வடுப்பட்டார்; ஆனாலும் (394) உரைக்கேன்; (395) விண்டு, தானே எக் குணமுமாகி, எவ்வுலகுமாகி எவ்வுயிருமாகி, உளனுமாகி இலனுமாகி (396) நானிலமும் உண்டான், உமிழ்ந்தான், அளந்தான், கோட்டிற்கொண்டான், அறமனைத்தும் கூறினன்; (397), விண்டுவல்லார் உருப்பொல்லார், தீப்புக ழார், வராகசமுள்ளார் (398), தங்கள் துயர் தாம் அடைக்கமாட்டாமல் எங்கள் பிரானை இரந்துரைப்பார் (399), திருமாலும் பிறதெய்வங்களுமாகிய இவரிடை வாசி பொன்னேரிரும்பெனவும் போதாதோ' (400) என்னும் பொழுதில் என முடிக்க.

401—403 சிறுபுலியூர்ப் புங்கவன் - சிறுபுலியூரில் எழுந்தருளியுள்ள உயர்ந்தோனை திருமால். வண்டு ஆடிக் கொழுதிக் குடைந்த - வண்டுகள் மொய்த்து உழுது குடைந்த. கொண்டல் - மேகம். பழுதற்ற - குற்றம் அற்ற. விண் துதிக்கும் - வீட்டுலகத்தார் போற்றும். விண் ஆகுபெயர். பழு தற்ற விண் என்றமையால் விண் என்பது வீட்டுலகையுணர்த்திநின்றது. தென் - அழகிய. மழிசைவேந்தன் - திருமழிசையாழ்வார். வலமாதல்கண்டு - வலம்வருதலைப்பார்த்து. திக்கு எல்லாம் - திசைகளிலெல்லாம். கண்வைத் தோன் - கடாக்ஷித்தவன்; என்றது திருமழிசையாழ்வார் சிறுபுலியூரில் வீதி வலம்வந்தகாலத்துப் புலியூர்த்திருமால் அவர் சென்ற சென்ற திசை தொறும் திரும்பி நோக்கிநின்ற வரலாறுணர்த்திநின்றது. மண் துதிக்க - மண்ணுலகோர்போற்ற. கண் ஆயிரம் உடையான் - திருமால். அன்னம் 'போ தாதோ' என்னுமளவில் (400) துழாய்க்கொண்டலும் (401) கண்வைத் தோனும் (402), ஆயிரம்கண் உடையானும் (403) ஆகிய சிறுபுலியூர்ப்புங்க வன் (401), திருத்தேர்மேற் கண்ணுற்றான் என முடிக்க. தண் ஆர்ந்த - குளிர்ச்சிபொருந்திய.

405 காணாத சேவடியுங் கையுங் கனிவாயும்
பூணார மார்பும் புனைதுகிலும்—தோணான்கும்

406 ஐந்து படையு மடற்கதிரோன் பேரொளியைச்
சிந்தி யொளிருந் திருமுடியும்—சுந்தரஞ்சேர்

407 வெள்ளக் கருணை விழியுந் திருமுகமும்
உள்ளத் தமைத்தா ளுருகினாள்—வள்ளத்

408 தனத்தி லணைக்கத் தடந்தோளி லிட்ட
வனத்துளப மாலை வழங்கீர்—புனத்திடையே

409 ஆய னெறிந்தமர மானேன் விளாமரத்திற்
காய்களிறு தின்ற கனியானேன்—வாயமுதம்

404—5 காவி முதலியவை திருமால் திருமேனிநிறத்துக்கு உவமை. கார்-மேகம். குவளை - குவளையும்; செய்யுள்விகாரத்தால் உம்மை தொக்கது. பூவை - காயாம்பூ. காயா - கருந்துளசி. பாவும் - பரவிய. மறை - வேதம். கனிவாயும் - கொவ்வைக்கனிபோன்ற அதரமும். ஆரம் பூண் மார்பும் - மாலையணிந்த மார்பும். புனை - அணிந்த. துகிலும் - பட்டும்= பீதாம்பரமும். தோள் நான்கும் - நான்கு தோள்களும்.

406 ஐந்துபடையும் - பஞ்சாயுதங்களும். அடற்கதிரோன் பேரொளியை-வருத்துகின்ற கிரணங்களையுடைய சூரியனுடைய மிக்க ஒளியை. சிந்தி - கெடுத்து. ஒளிரும் - விளங்குகின்ற. சுந்தரம் சேர் - அழகு பொருந்திய.

407—8 கருணைவெள்ளவிழி யென இயைக்க. உள்ளத்து - மனத்தில். வள்ளத்தனத்தில் - கிண்ணம்போன்ற தனத்தில். தடம் - பெரிய. வனத்துளபமாலை - அழகிய துழாய்மாலை. புனத்திடை - காட்டில்.

404—407 பேரிளம்பெண், சிறுபுலியூரிறைவனைச் சிந்தித்தபடி. சேவடியும் துகிலும் மார்பும் கையும் நான்குதோளும் (405), ஐந்துபடையும் (406), வாயும் (405), விழியும் முகமும் (407), முடியும் (406), வடிவும் 404 உள்ளத்தமைத்தாள் எனப் பாதாதிகேசமாகக் கூட்டுக. இது, திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் என்னும் திருப்பதிகத்தின் சுருக்காய் அமைந்தது.

409 ஆயன் - இடையன். எறிந்த - அறுத்துத்தள்ளிய. இடையன் எறிந்த மரம் தழையும் குழையும் அற்று வாடிநிற்றல்போல் யானும் மன்மத

410 தாரீர் தழுவத் தடமார்பு தந்துமுகம்
பாரீரென் னுவி பதைப்பேனே—பார்மகளைப்

411 பொங்கெரியில் மூழ்கப் பொறுத்தீ ரெனைக்காம
வெங்கனலில் வேவ வெறுத்தீரோ—கொங்கையிணை

412 பூரிக்க வும்முடைய பொன்மேனி யைத்தழுவிப்
பாரித் திருந்தநலம் பாராமல்—ஊரறியாக்

413 காட்டி லெறித்த நிலவாய்க் கமரிடையே
கோட்டு மலர்சொரிந்த கொள்கையாய்—ஈட்டியவென்

னம்பால் தாக்குண்டு நிறமும் ஒளியுமற்று மெலிந்தேன் என்றபடி. "இடைய னெறிந்த மரமே யொத்திராமே" (திவ். பெரியதிரு—11-8-6) என்று பெரி யாரும் பணித்தார். காய் - சினந்த. களிறு - யானை. யானையென்பது விளாங்கனியிற் பற்றுவதோர் நோய். யானையுண்ட விளங்கனி யென்பது வழக்கு. விளாமரத்திற் கனி, களிறுதின்ற கனி யென இயைக்க. யானை யுண்ட விளாங்கனி உள்ளீடற்றிருத்தல்போல் யானும் யானைபோல்வானாகிய உன்னால் நாணும் நிறையும் கவரப்பட்டு உள்ளீடற்றவளானேன் என்றவா று வாயமுதம் - அதரபானம்.

410—11 தாரீர் - தந்தீரில்லை. தழுவ - அணைக்கும்படி. தடம் - பெரிய. பாரீர் - பார்த்தீரில்லை. ஆவி - உயிர். பதைத்தல் - துடித்தல். பார்மகளை-பூமிதேவியின் மகளாகிய சீதாபிராட்டியை. பூமியிற் பிறந்தமை பற்றிச் சீதாபிராட்டியைப் பார்மகள் என்றார். பார்மகளைப் பொங்கு எரியில் மூழ்கப் பொறுத்தீர் என்றது, இராவணனைவென்று களங்கொண்ட இராம பிரான், சீதாபிராட்டியின் கற்புடைமையை உலகம் அறியும்பொருட்டு அவளை அக்கினியில் முழுகியெழும்படி இட்டகட்டளையை யுட்கொண்டெழுந் தது. பொங்கு எரி - கிளர்ந்தெழும் நெருப்பு. காம வெங்கனல் - காம மாகிய கொடிய நெருப்பு. காமம் நெருப்பினுங் கொடிதென்பது, "ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு, நீருட் குளித்தும் உயலாகும் - நீருட், குளிப்பி னும் காமம் சுடுமே குன்றேறி, ஒளிப்பினும் காமம் சுடும்" என்னும் நாலடிச் செய்யுளானும் விளங்கும். வேவ - வேகும்படி. கொங்கையிணை - இரண்டு தனங்களும்.

412 பூரிக்க - பருக்க. நலம் - அழகு.

413—15 மக்கள் வழங்காத காட்டில் எறித்த நிலவும், கமரிடையே கோட்டுமலர்சொரிந்த கொள்கையும் பேரிளம்பெண்ணின் அழகும் வடிவும்

414 வண்மை 'யழகும் வடிவுங் குடிபோகிப்
பெண்மை நலமும் பிழையாமே—விண்மதியத்

415 தீக்கு மலைகடற்குந் தென்றலுக்கு மன்றிலுக்கும்
வேய்க்கு மிரையாக விட்டீரே—தாய்க்கும்

416 பகையானே னென்று பலபலவுஞ் சொல்லி
வகையாவ தெல்லாம் வகுத்தாள்—முகைமுலையார்

417 பேதை முதலாகப் பேரிளம்பெண் மாதளவா
யோதுமட வாரு மொருகோடி—காதல்

பயனின்றிக் கழிதலுக்கு உவமை. கமர் - நிலவெடிப்பு. கோட்டுமலர் - கிளைகளிலுள்ள பூ. ஈட்டிய - நிறைவித்த. வண்மை அழகும் வடிவும் - வளத்தொடு கூடிய அழகும் உடலும். குடிபோகி - என்னை விட்டுநீங்க; போகி என்பதனைப் போக எனத் திரிக்க. என்வண்மையழகும் வடிவும் காட்டில் எறித்த நிலவாய்க் கமரிடையே கோட்டுமலர்சொரிந்த கொள்கையாய்க் குடிபோக, என் பெண்மைநலமும் பிழையாம் எனக் கூட்டுக. விண் - ஆகாயத்திலுள்ள. மதியத்தீக்கும் - சந்திரனாகிய நெருப்புக்கும். காமநோயுற்றவர்க்கு மதியும் கடலும் தென்றலும் அன்றிலும் வேய்ங்குழலும் அந்நோயை மிகுவிக்குமாதலின், 'தீக்கும் ... ... வேய்க்கும் இரையாக்கி விட்டீ' ரென்றாள். அன்றில் - ஒரு பறவை. வேய் - வேய்ங்குழல்.

416 பகையானேன் - விரோதியானேன். வகையாவதெல்லாம் - தன்விருப்பத்தை நிறைவேற்றுவிக்கும் உபாயமான வார்த்தைகளையெல்லாம். வகுத்தாள் - சொன்னாள். முகை - அரும்பு.

407—16 பேரிளம்பெண் சிறுபுலியூரிறைவன் திருவுருவை உள்ளத்தமைத்து உருகினளாகி (407), அவ்விறைவனைநோக்கி, மாலை வழங்கீர் (408), வாயமுதம் தாரீர், முகம்பாரீர் (410), வெறுத்தீர் (411), இரையாக விட்டீர் (415), அதனால் மரமானேன், கனியானேன் (409), ஆவிபதைப்பேன் (410), உம்முடையமேனியைத்தழுவி நலம்பெறுடையாமையால் (412) என் அழகும் வடிவும் (414) காட்டிலெறித்த நிலவாய்க் கமரில் மலர் சொரிந்த கொள்கையாய் (413) ஒழிய, (414), என் பெண்மைநலமும் பிழையாம்; யான் தாய்க்கும் பகையானேன் என்று (மேலும்) வகையாவதெல்லாம் வகுத்தாள் (416) என முடிக்க.

418 மடவாரு நின்ற மயங்கமறை நான்குங்
கடவாத தாட்கமலக் கண்ணன்—சுடராழி

419 ஆய னருமா கடலமுத மண்டமுண்ட
வாயன் றிருமா மகள்மருவும்—ஆயிரம்பேர்ச்

420 சீருடையான் செல்வஞ் செழிக்குஞ் சிறுபுலிசை
யூருடையான் போந்தா னுலா.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ ௮௰௯-ஆண்டு கார்த்திகைமீ ௰௩௨

சுக்ரவாரமும் அவிட்டநட்சத்திரமும்பெற்ற

சுபயோக சுபகரணத்தில் வடமலையப்பன்கவிராயனுடைய

சிறுபுலியூருலா.

418—20 கண்ணன், ஆயன், அருமாகடலமுதம், அண்டமுண்ட வாயன், திருமாமகள் மருவும் சீருடையான், ஆயிரம் பேரான், சிறுபுலிசையூருடையான் என்பன பெயரடுக்கு. சிறுபுலிசை - சிறுபுலியூர், மரூஉ. சிறுபுலிசையை ஊராகவுடையான் உலாப்போந்தான் என்க.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ...	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா ...	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை ...	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ...	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ...	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஐந்திணையைம்பது (உரையுடன்) ...	0	4	0
2.	கனாநூல் (5) இனியதுநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்) ...	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை) ...	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ...	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்... ...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ...	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம் ...	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும் ...	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0

42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0

குறிப்பு:-ஸ்டாக்கிவில்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 45 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4-0-0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

T. வேங்கடேசராவ்,
Ag. மானேஜர்.